# அமைச்சரவை அலுவலகம்

# செயலாற்றுகை அறிக்கை

# 2011

குடியரசு சதுக்கம், சேர் பாரோன் ஜயதிலக்க மாவத்தை, கொழும்பு - 01.

**பொருளடக்கம்**


**1 அறிமுகம் 1**

1.1 தொலைநோக்கு 1

1.2 செயற்பணி 1

1.3 குறிக்கோள் 1

1.4 செயற்பாடுகள் 1

**2 அமைச்சரவை அலுவலகமும் அதன் பணிகளும்** 2

2.1 அமைச்சரவைக் கூட்டங்களுக்குரிய பணிகள் 2

2.2 அமைச்சரவை உபகுழு கூட்டங்களுக்குரிய பணிகள் 4

2.3 அமைச்சரவையினால் நியமனம் செய்யப்படும் உத்தியோகத்தர்கள் குழுக்களுக்குரிய பணிகள் 4

2.4 அதிமேதகைய சனாதிபதியினால் அல்லது அமைச்சரவையினால் கையளிக்கப்படும் விசேட பணிகள் 4

2.5 அமைச்சரவை விஞ்ஞாபனங்களைத் தயாரித்தல் தொடர்பிலான வழிகாட்டல்களை வழங்குதல் 4

2.6 அமைச்சரவைத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமான தொடர் நடவடிக்கைகள் 4

2.7 அமைச்சுக்களுடனும் ஏனைய நிறுவனங்களுடனும் சிறந்த கூட்டிணைப்பினைப் பேணுதல் 5

**3 அமைச்சரவை அலுவலகத்தின் கட்டமைப்பு 5**

3.1 விஞ்ஞானப் பிரிவு 5

3.2 நிகழ்ச்சிக் குறிப்புக்களைத் தயாரித்தலும் மொழிபெயர்ப்புப் பிரிவும் 5

3.3 கணனிப் பிரிவு 6

3.4 தாபன மற்றும் சேவைப் பிரிவு 6

3.5 கணக்குப் பிரிவு 6

**4 2011 ஆம் ஆண்டில் அமைச்சரவை அலுவலகத்தின் செயலாற்றுகை 6**

4.1 அமைச்சரவைக் கூட்டங்களுக்குரிய பணிகள் 6

4.2 அமைச்சரவை உபகுழுக்களுக்குரிய பணிகள் 7

4.3 அமைச்சரவையினால் நியமனம் செய்யப்படும் உத்தியோகத்தர்கள் குழுக்களின் கடமைகள் 12

4.4 அதிமேதகைய சனாதிபதியினால் அல்லது அமைச்சரவையினால் குறித்தொதுக்கப்பட்ட விசேட பணிகள் 13

4.5 அமைச்சரவை விஞ்ஞாபனங்கள், அறிக்கைகள் சம்பந்தமாக அமைச்சுகளுக்கு வழிகாட்டல்களை வழங்குதல் 16

4.6 அமைச்சரவை அலுவலகத்தின் நவீனமயப்படுத்தற் பணிகள் 16

**5 அமைச்சரவை அலுவலக பணிகளின் விசேட தன்மை** 17

**6 நிதி மீளாய்வு** 18

6.1 மதிப்பீடு 18

6.2 உத்தியோகத்தர்களுக்காக கடன் முற்பணங்களை வழங்குதல் 18

6.3 தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்தல் 19

6.4 வருடாந்த கணக்குகளைச் சமர்ப்பித்தல் 19

6.5 வருடாந்த பொருட்களின் அளவு ஆய்வு 19

6.6 கணக்காய்வு விசாரணை 19

**இணைப்புகள்**

இணைப்பு 1 - 2011 ஆம் ஆண்டில் அமைச்சுகள் ஒவ்வொன்றினாலும் அமைச்சரவை அலுவலகத்திற்கு அனுப்பப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனங்கள்

இணைப்பு 2 - அமைச்சரவை விஞ்ஞாபனங்களை அமைச்சரவைக்குச் சமர்ப்பித்தல் தொடர்பிலான வழிகாட்டல்கள்

இணைப்பு 3 - 2011-12-31 ஆம் திகதியன்றுக்கான பதவியணி

இணைப்பு 4 - ஒதுக்கீட்டுக் கணக்கு – 2011

இணைப்பு 5 - அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான B முற்பணக்கணக்கின் ஒப்பீட்டுக் கூற்று - 2011 ஆம் ஆண்டு

# அமைச்சரவை அலுவலகம்

## 1. அறிமுகம்

### 1.1 தொலைநோக்கு

ஆட்சித்துறைக்கு ஒத்தாசை வழங்கும் நம்பகரமான அரசாங்க நிறுவனமாதல்.

### 1.2 செயற்பணி

அரசியலமைப்பின் 43 (1) ஆம் துணை உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவைக்கு கையளிக்கப்பட்டுள்ள குடியரசின் நல்லாட்சிக்கான நெறிப்படுத்தலுக்கு இசைவாக தீர்மானத்தை எடுக்கும் செயற்பாட்டுக்குத் தேவையான சகல ஒத்துழைப்புகளையும் வினைத்திறனுடன் நல்குதல்

### 1.3 குறிக்கோள்

அமைச்சரவையினால் தீர்மானம் எடுக்கும் போதும் அமைச்சரவை உப குழுக்களினால் சிபாரிசுகளைச் சமர்ப்பிக்கும் போதும் இந்தப் பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்.

### 1.4 செயற்பாடுகள் :

(i) அமைச்சரவை விஞ்ஞாபனங்களை தயாரித்தல் மீது அறிவுறுத்துரைகளை அமைச்சுகளுக்கு வழங்குதலும் இது தொடர்பில் அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் சிரேட்ட உத்தியோகத்தர்களுக்கும் வழிகாட்டுதலும்.

(ii) கொள்கை வகுத்தல் மற்றும் குடியரசு அரசாங்கத்தின் நல்லாட்சி சம்பந்தமாக அரசியலமைப்பின் மூலம் அமைச்சரவைக்கு கையளிக்கப்பட்டுள்ள பொறுப்புகளை நிறைவேற்றும் போது அமைச்சரவைக்கும் அமைச்சரவை உபகுழுக்களுக்கும் இயைபுள்ள அமைச்சரவை விஞ்ஞாபனம் தொடர்பில் தெளிவானதும் இயைபுள்ள சகல விடயங்கள் தொடர்பாகவும் முறையான புரிந்துணர்வுடன் தீர்மானங்களை எடுப்பதை இலகுவாக்குவதன் பொருட்டு இந்த விஞ்ஞாபனங்கள் சம்பந்தப்பட்ட சட்ட மற்றும் கொள்கைப் பின்னணிகள் ஆழமாக ஆராயப்பட்டு அமைச்சரவைக்கும் அமைச்சரவை உப குழுக்களுக்கும் விடயங்களை முன்வைத்தல்.

(iii) இயைபுள்ள அமைச்சர்களின் அவதானிப்புரைகளைப் பெறுவதன் பொருட்டு அமைச்சரவை விஞ்ஞாபனங்களை தொடர்புபடுத்துதல்.

(vi) அமைச்சரவை விஞ்ஞாபனங்களை கவனமாகப் பரிசீலனை செய்ததன் பின்னர் அமைச்சரவை கூட்டத்துக்கான நிகழ்ச்சி நிரலில் அவற்றை நிரற்படுத்துதல்.

(v) அமைச்சரவை விஞ்ஞாபனங்களை இயைபுள்ள அவதானிப்புரைகளுடன் பரிசீலனை செய்வதன் பொருட்டு அமைச்சரவை உபகுழுக்களுக்கும் அமைச்சரவைக்கும் சமர்ப்பித்தல்.

(vi) அமைச்சரவை உபகுழுக்களினதும் அமைச்சரவையினதும் தீர்மானங்கள் உள்ளடக்கப்பட்ட நிகழ்ச்சிக் குறிப்புகளை மும்மொழிகளிலும் தயாரித்தல் மற்றும் குறித்த அறிக்கைகளை மாண்புமிகு அமைச்சர்களுக்கும் இயைபுள்ள அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் பிற இயைபுள்ள அதிகாரிகளுக்கும் தொடர்புபடுத்துதல்.

(vii) அமைச்சரவை உபகுழுக்களினதும் அமைச்சரவையினதும் கூட்டங்களுக்கு தேவையான சகல சேவைகளையும் வழங்குதல்.

(viii) அமைச்சரவையினால் எடுக்கப்படும் தீர்மானங்களை இயைபுள்ள அமைச்சுகளுக்கு அறிவித்தல்.

(ix) அதிமேதகைய சனாதிபதியினால் அல்லது அமைச்சரவையினால் விதித்துரைக்கப்படும் பிற ஏதேனும் பணிகளை நிறைவேற்றுதல்.

## 2. அமைச்சரவை அலுவலகமும் அதன் பணிகளும்

குடியரசு அரசாங்கத்தின் நல்லாட்சியை நெறிப்படுத்துவது சம்பந்தமாக அரசியலமைப்பின் மூலம் அமைச்சரவைக்கு கையளிக்கப்பட்டுள்ள பொறுப்புகளை நிறைவேற்றுகையில் தேவையான ஒத்துழைப்புச் சேவைகளை வழங்குவதன் பொருட்டு, அமைச்சரவை அலுவலகமானது தாபிக்கப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் VIII ஆம் அத்தியாயத்தின் 51ஆவது உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அதிமேதகைய சனாதிபதியினால் நியமனம் செய்யப்படும் அமைச்சரவைச் செயலாளரானவர் அமைச்சரவை அலுவலகத்தின் தலைவராகக் கடமையாற்றுகின்றார். அதிமேதகைய சனாதிபதியின் பணிப்புக்கமைவாக அதிமேதகைய சனாதிபதியினால் அல்லது அமைச்சரவையினால் கையளிக்கப்படும் கடமைகளையும் பணிகளையும் நிறைவேற்றுவதற்கு அமைச்சரவை செயலாளருக்கு ஒத்துழைப்பு நல்குவது இவ்வலுவலகத்தின் பொறுப்பாகும்.

இதற்கமைவாக அமைச்சரவை அலுவலகத்தின் பிரதான பணிகள் பின்வருமாறு எடுத்துக் காட்டப்படலாம்

### 2.1 அமைச்சரவைக் கூட்டங்களுக்குரிய பணிகள் :

அமைச்சரவைக்குச் சமர்ப்பிப்பதன் பொருட்டு அமைச்சுக்கள் ஒவ்வொன்றினாலும் இந்த அலுவலகத்திற்கு அனுப்பப்படும் அமைச்சரவை விஞ்ஞாபனங்கள், அமைச்சரவை உபகுழு அறிக்கைகள், அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களுக்குரிய வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகள், அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளுக்குரிய ஆண்டறிக்கைகள், கணக்குகள் என்பன அதிமேதகைய சனாதிபதியினால் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கும் அமைச்சரவை அலுவலகத்தினால் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்துரைகளுக்கும் அமைவாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளனவா என்பது பற்றி பரிசீலனை செய்து குறித்த ஆவணங்கள் இந்த அலுவலகத்தினால் பொறுப்பேற்கப்படுகின்றன. இவ்வாறு பொறுப்பேற்கப்படும் சகல அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கும் தனிவேறான இலக்கங்கள் வழங்கப்படுவதோடு, இந்த அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் ஒவ்வொன்றுக்கும் வழங்கப்படும் தனிவேறான இலக்கத்தின் கீழ் அவை அமைச்சரவை அலுவலகத்தில் அட்டவணைப்படுத்தப்படும். இவ்வாறு அட்டவணைப்படுத்தப்படும் அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் இயைபுள்ள

மாண்புமிகு அமைச்சர்களின் அவதானிப்புரைகளைப் பெறுவதன் பொருட்டு தொடர்புபடுத்தப்படும் .

வழக்கமாக வெள்ளிக்கிழமை நாட்களில் அடுத்த வாரத்தில் நடாத்தப்படவுள்ள அமைச்சரவை கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்பட்டு பூர்த்திசெய்யப்படுவதுடன் இந்த நிகழ்ச்சி நிரலானது கடந்த அமைச்சரவை கூட்டத்திற்கான வரைவு நிகழ்ச்சிக் குறிப்புடன் அடுத்த வாரத்திற்குரிய அமைச்சரவை கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனங்களுடன் வெள்ளிக்கிழமையன்று பிற்பகலில் அல்லது அடுத்துவரும் திங்கட்கிழமையன்று காலையில் மாண்புமிகு அமைச்சர்களுக்கு கையளிக்கப்படும்.

மாண்புமிகு அமைச்சர்களுக்கு அடுத்தவாரத்திற்குரிய அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் கையளிக்கப்பட்டதன் பின்னர், அமைச்சரவை கூட்டங்கள் நடாத்தப்படவுள்ள திகதிவரை அந்தந்த அமைச்சுக்களினால் அமைச்சரவை அலுவலகத்திற்கு சமா்ப்பிக்கப்படும் அமைச்சரவை விஞ்ஞாபனங்களிலிருந்து அதிமேதகைய சனாதிபதியின் அறிவுறுத்தலுக் கமைவாக தேசிய நலனின் பொருட்டு உடனடியாக தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டியவைகளும் பிற விசேட நிலைமைகளின் கீழ் அமைச்சரவையினால் உடனடியாக பரிசீலனை செய்யப்பட வேண்டுமெனக் கருதப்படுபவைகளுமான அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் உள்ளடக்கப்பட்ட குறைநிரப்பு நிகழ்ச்சி நிரலொன்று தயாரிக்கப்பட்டு அவை அமைச்சரவையினால் பரிசீலனை செய்யப்படுவதன் பொருட்டு அமைச்சரவைக் கூட்டம் நடாத்தப்படும் போது சமர்ப்பிக்கப்படும். அதே போன்று விடயத்திற்குப் பொறுப்பான மாண்புமிகு அமைச்சர்களினால் அதிமேதகைய சனாதிபதியின் அங்கீகாரம் பெறப்படுவதற்கு உட்பட்டு, விசேட மற்றும் அவசர விடயங்கள் தொடர்பிலான அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் அமைச்சரவைக் கூட்டம் நடாத்தப்படும் போது அமைச்சரவையினால் பரிசீலனை செய்யப்படுவதற்காக அட்டவணைப்படுத்தப்படும். இவ்வாறு சமர்ப்பிக்கப்படும் சகல அமைச்சரவை விஞ்ஞாபனங்களின் தொடர்பில் செம்மையாக இயைபுள்ள சகல விடயங்களின் தொடர்பிலும் சரியான புரிந்துணர்வுடன் தீர்மானம் எடுப்பதை இயலுமாக்கும் விதத்தில், இந்த விஞ்ஞாபனங்கள் சம்பந்தப்பட்ட சட்ட மற்றும் கொள்கை பற்றிய பின்னணியை ஆழமாக ஆராய்ந்து அமைச்சரவைக்கும் அமைச்சரவை உபகுழுக்களுக்கும் விடயங்களை சமர்ப்பிப்பதும் கூட இந்த அலுவலகத்தினால் நிறைவேற்றப்படும் முக்கிய பணியாகவுள்ளது.

அமைச்சரவை கூட்டம் நடாத்தப்பட்டதன் பின்னர், நாட்டு மக்களுக்கான முக்கியமான அமைச்சரவைத் தீர்மானங்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையொன்று அன்றைய தினமே தயாரிக்கப்பட்டு அது ஊடகங்களுக்கு வழங்கப்படுவதற்காக இந்த பணிக்கு பொறுப்பாகவுள்ள மாண்புமிகு ஊடகத்துறை அமைச்சருக்கு அனுப்பி வைக்கப்படும்.

அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட சகல தீர்மானங்களும் உள்ளடக்கப்பட்ட நிகழ்ச்சி குறிப்பு தயாரிக்கும் பணி புதன்கிழமை இரவு வேளையிலேயே ஆரம்பிக்கப்படுவதோடு, அடுத்து வரும் இரண்டு நாட்களுள் இந்த நிகழ்ச்சிக் குறிப்பானது மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்டு, அடுத்தவார கூட்டத்துக்கான நிகழ்ச்சி நிரலும் இயைபுள்ள அமைச்சரவை விஞ்ஞாபனங்களும் மாண்புமிகு அமைச்சர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

அந்தந்த அமைச்சுகளினால் சமர்ப்பிக்கப்படும் விஞ்ஞாபனங்கள் பற்றி கலந்துரையாடப்பட்டதன் பின்னர், அமைச்சரவையினால் எடுக்கப்படும் தீர்மானங் களிலிருந்து உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனக் கருதப்படும்

தீர்மானங்களின் வரைவுகள் துரிதமாக "பெக்ஸ்" மூலம் இயைபுள்ள அமைச்சுகளுக்கு அனுப்பப்படுவதோடு, அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் அதற்கு முன்னைய கூட்டத்திற்கான தீர்மானங்கள் உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர், மும்மொழிகளிலும் அவை தயாரிக்கப்பட்டு, இத்தீர்மானங்களை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு கையளிக்கப்பட்டுள்ள அமைச்சுக்களுக்கும் பிற அரசாங்க நிறுவனங்களுக்கும் அவை அமைச்சரவை அலுவலகத்தினால் அனுப்பிவைக்கப்படும் .

2.2 **அமைச்சரவை உபகுழுக் கூட்டங்களுக்குரிய பணிகள் :**

அமைச்சர்களினால் ஒவ்வொரு துறை சம்பந்தமாகவும் சமர்ப்பிக்கப்படும் அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் தொடர்பில் முதலில் தேவையானவாறு சிரேட்ட அரசாங்க உத்தியோகத்தர்களின் ஒத்தாசையுடன் ஆழமாக ஆராய்ந்து, அமைச்சரவைக்கு சிபாரிசுகளைச் சமர்ப்பிப்பதை இயலச் செய்வதன் பொருட்டு அந்தந்த விடயங்களுக்கு ஏற்புடைத்தானவாறு மாண்புமிகு அமைச்சர்களைக் கொண்ட அமைச்சரவை உபகுழுக்கள் தாபிக்கப்பட்டுள்ளதோடு, அவ்வாறு தாபிக்கப்பட்ட பின்வரும் உபகுழுக்கள் 2011 ஆம் ஆண்டில் தொழிற்பட்டுக் கொண்டிருந்தன.

(அ) தாபன விடயங்கள் பற்றிய அமைச்சரவை உபகுழு;
(ஆ) சட்டவாக்கம் பற்றிய அமைச்சரவை உபகுழு;
(இ) மின்வலு, சக்தி பற்றிய அமைச்சரவை உபகுழு ; அத்துடன்
(ஈ) தனிப்பட்ட உறுப்பினர் சட்டமூலங்களை பரிசீலனை செய்து, சிபாரிசுகளை சமர்ப்பிக்கும் பொருட்டு நியமிக்கப்பட்டுள்ள சிரேட்ட அமைச்சர்கள் அடங்கிய உபகுழு.

2.3 **பல்வேறு விடயங்கள் சம்பந்தமாக ஆராய்ந்து சிபாரிசுகளைச் சமர்ப்பிப்பதற்காக அமைச்சரவையினால் நியமனம் செய்யப்படும் உத்தியோகத்தர்கள் குழுக்களுக்குரிய பணிகள் :**

அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படும் அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்குரிய விடயங்கள் தொடர்பில் மேலும் ஆராய்ந்து, சிபாரிசுகளை சமர்ப்பிப்பதற்காக நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் குழுக்களுடன் இணைந்து இயைபுள்ள அறிக்கைகளை உரிய திகதியன்று பெற்றுக் கொண்டதன் பின்னர், அமைச்சரவையினால் பரிசீலனை செய்யப்படுவதன் பொருட்டு அமைச்சரவைக்குச் அவற்றைச் சமர்ப்பிக்கும் பொறுப்பு அமைச்சரவை அலுவலகத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளது

2.4 **அதிமேதகைய சனாதிபதியினால் அல்லது அமைச்சரவையினால் கையளிக்கப்படும் விசேட பணிகள் :**

அமைச்சரவைச் செயலாளருக்கு அதிமேதகைய சனாதிபதியினாலும் அமைச்சரவை யினாலும் காலத்துக்குக் காலம் விசேட பணிகள் கையளிக்கப்படுவதோடு, இந்தப் பணிகளின் பொறுப்புக்களை துரிதமாக நிறைவேற்றுவதற்கு தேவையான ஒத்துழைப்பை வழங்குவது அமைச்சரவை அலுவலகத்தின் பணியாகும்.

2.5 **அமைச்சரவை விஞ்ஞாபனங்களைத் தயாரித்தல், தொடர்பிலான வழிகாட்டல்களை வழங்குதல்:**

அமைச்சரவை விஞ்ஞாபனங்களைத் தயாரிப்பது தொடர்பில் காலத்துக்குக் காலம் வழிகாட்டல்களையும் அறிவுறுத்துரைகளையும் வழங்குவது அமைச்சரவை அலுவலகப் பொறுப்புகளில் ஒன்றாகும்.

2.6 **அமைச்சரவைத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமான தொடர் நடவடிக்கைகள் :**

அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்படும் அமைச்சரவை விஞ்ஞாபனங்களை அடிப்படையாகக் கொண்டு, அமைச்சரவையினால் எடுக்கப்படும் தீர்மானங்கள் அவ்வாறே உரிய காலப்பகுதியினுள் நடைமுறைப்படுத்தப்படுவதனை உறுதிசெய்யும் நோக்குடனும் இந்தத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தும்போது எழும் பிரச்சினைகள் தொடர்பில் அமைச்சரவையின் கவனத்திற்கு கொண்டுவரும் நோக்குடனும் அமைச்சரவையினால் எடுக்கப்படும் தீர்மானங்களின் நடைமுறைப்படுத்துதல் தொடர்பில் அமைச்சரவை அலுவலகத்தினால் தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

2.7 **அமைச்சுகளுடனும் ஏனைய அரசாங்க நிறுவனங்களுடனும் நெருக்கமான கூட்டிணைப்பினைப் பேணுதல் :**

சகல அமைச்சுகளுடனும் அரசாங்கத்தின் ஏனைய நிறுவனங்களுடனும் அதேபோன்று அரசாங்க சேவைகள் ஆணைக்குழு, தேசிய சம்பளங்கள், பதவியணிகள் ஆணைக்குழு, சட்டமா அதிபர் திணைக்களம் போன்ற தாபனங்களுடனும் நெருங்கிய கூட்டிணைப்பினை அமைச்சரவை அலுவலகமானது பேணி வருகின்றது.

3. **அமைச்சரவை அலுவலகத்தின் கட்டமைப்பு :**

அமைச்சரவை அலுவலகத்திற்கு கையளிக்கப்பட்டுள்ள மேலே குறிப்பிடப்பட்ட பணிகளை நிறைவேற்றும் விதத்தில் அமைச்சரவை அலுவலகத்தின் கட்டமைப்பு பின்வருமாறு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

3.1 **விஞ்ஞாபனப் பிரிவு :**

அமைச்சரவைச் செயலாளரின் அறிவுறுத்தல் மற்றும் வழிகாட்டலின் மீது அமைச்சரவை கூட்டங்களுக்கும் உபகுழு கூட்டங்களுக்குமான நிகழ்ச்சி நிரல், குறைநிரப்பு நிகழ்ச்சி நிரல் ஆகியவற்றைத் தயாரித்தல், அந்தந்த வாரத்திற்குரிய அமைச்சரவை விஞ்ஞாபனங்களை மாண்புமிகு அமைச்சர்கள் இலகுவாக அவற்றை கையாளுவதை இயலுமானதாக்கும் விதத்தில் அவற்றைக் கோவைப்படுத்துதல் மற்றும் தயாரிக்கப்படும் அமைச்சரவை கூட்டங்களுக்கான நிகழ்ச்சி நிரல், வரைவுத் தீர்மானங்கள், அடுத்த அமைச்சரவைக் கூட்டத்திற்குரிய அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் உள்ளடக்கப்பட்ட கோவை ஆகியன மாண்புமிகு அமைச்சர்களுக்கு காலதாமதமின்றி கிடைப்பதற்கு வழிவகை செய்வது இந்தப் பிரிவின் பொறுப்பாகும். அதேபோன்று உறுதிப்படுத்தப்படும் அமைச்சரவைத் தீர்மானங்களை அந்தந்த அமைச்சுகளின் செயலாளர்களுக்கும் பிற உத்தியோகத்தர் களுக்கும் விநியோகிப்பது இந்தப் பிரிவினால் நிறைவேற்றப்படுகின்றது.

3.2 **நிகழ்ச்சிக் குறிப்புகளைத் தயாரித்தலும் மொழிபெயர்ப்புப் பிரிவும் :**

அமைச்சரவை செயலாளரின் நேரடியான மற்றும் நெருங்கிய மேற்பார்வையின் கீழ் அரசாங்கத்தின் மும்மொழிக் கொள்கைக்கு அமைவாக அமைச்சரவைக் கூட்டங்களுக்கான நிகழ்ச்சிக் குறிப்புகள், தீர்மானங்கள், அமைச்சரவை உபகுழு கூட்டங்களுக்கான நிகழ்ச்சிக் குறிப்புகள், தீர்மானங்கள், அமைச்சரவைக்கும் அமைச்சரவை உபகுழுக்களுக்கும் சமர்ப்பிக்கப்படும் அறிக்கைகள் யாவும் மும்மொழிகளிலும் (சிங்களம், தமிழ், ஆங்கிலம்) தயாரித்தல் இந்தப் பிரிவினால் நிறைவேற்றப்படுகின்றது.

3.3 **கணனிப் பிரிவு**

இப்பிரிவில், மும்மொழிகளிலும் தயாரிக்கப்படுகின்ற அமைச்சரவைக் கூட்டங்களுக்கான நிகழ்ச்சிக் குறிப்புகள் அமைச்சரவை உபகுழு கூட்டங்களுக்கான நிகழ்ச்சிக் குறிப்புகளும் அமைச்சரவைக்கும் அமைச்சரவை உபகுழுக்களுக்கும் சமர்ப்பிக்கப்படும் பிற அறிக்கைகளும் ஆவணங்களும் மும்மொழிகளிலும் கணனிமயப்படுத்தப்படுகின்றது. பொதுமக்களுக்கான முக்கியமான அமைச்சரவைத் தீர்மானங்கள் இணையத்தளத்தில் இந்தப் பிரிவினால் வெளியிடப்படுகின்றது.

3.4 **தாபன மற்றும் சேவைப் பிரிவு :**

அலுவலகத்தின் பணிகளை வினைத்திறனுடனும் முறையாகவும் நிறைவேற்றுவதற்குத் தேவைப்படும் சகல உதவிச் சேவைகளையும் வசதிகளையும் வழங்கும் பிரிவாக தாபன மற்றும் சேவைப் பிரிவு தொழிற்படுகின்றது. அதே போன்று பணியாட்தொகுதிக்குத் தேவையான பதவிகளை உருவாக்குதல், இயைபுள்ள பதவிகளுக்கு பொருத்தமான உத்தியோகத்தர்களை பொதுநிருவாக அமைச்சிடமிருந்து பெற்றுக் கொள்ளல், உத்தியோகத்தர்களை பயிற்சி நடவடிக்கைகளுக்கு அனுப்புதல் ஆகிய பணிகள் இந்த பிரிவுக்கு கையளிக்கப்பட்டுள்ளது. பதவியினர்களின் பதவியுயர்வுகளுக்கு உரிய நடவடிக்கைகள், பிரத்தியேக கோவைகள் சம்பந்தமான நிருவாக, தாபன பணிகள் யாவும் இந்த பிரிவினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அலுவலகத்தின் பணிகளை வினைத்திறனுடன் நடாத்திச் செல்வதற்குத் தேவையான போக்குவரத்து, தபால் மற்றும் நலன்புரி பணிகளும் கூட இந்தப் பிரிவிற்கு கையளிக்கப்பட்டுள்ளது.

3.5 **கணக்குப் பிரிவு :**

பணியாட்டொகுதியினருக்கு சம்பளம் மற்றும் படிகளை வழங்குதலும் இவை சார்ந்த பணிகளும் அலுவலகத்திற்குத் தேவையான பொருட்களின் கொள்வனவும் அலுவலக கணக்குப் பணிகளை செயற்படுத்துதலும் செயலாளரின் நேரடி மேற்பார்வையின் கீழ் வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளைத் தயாரித்தலும் கணக்காய்வு விசாரணைகளுக்குரிய சகல ஆரம்ப பணிகளை நிறைவேற்றுதலும் இந்தப் பிரிவினால் நிறைவேற்றப்படுகின்றது.

## 4. 2011 ஆம் ஆண்டில் அமைச்சரவை அலுவலகத்தின் செயலாற்றுகை :

4.1 **அமைச்சரவைக் கூட்டங்களுக்குரிய பணிகள் :**

2011 ஆம் ஆண்டில் 41 அமைச்சரவைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதோடு, அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 2,408 அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் இந்த கூட்டங்களில் அமைச்சரவையினால் பரிசீலனை செய்யப்பட்டுள்ளன. அந்தந்த அமைச்சுகளினால் 2011 ஆம் ஆண்டில் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அமைச்சரவை விஞ்ஞாபனங்களின் எண்ணிக்கை இணைப்பு 1 இல் காண்பிக்கப்பட்டுள்ளது. இந்த விஞ்ஞாபனங்கள் சம்பந்தமான அவதானிப்புரைகளை இயைபுள்ள அமைச்சுகளிலிருந்து பெற்றுக் கொள்ளலும் இதே காலப்பகுதியில் இந்த பத்திரங்கள் தொடர்புபட்ட சட்ட மற்றும் கொள்கைப் பின்னணி பற்றியும் இந்தப் பிரேரிப்புகளினால் எழும் சிக்கல்கள் பற்றியும் அமைச்சரவைக் கூட்டத்தில் விடயங்களை முன்வைப்பதற்காக ஆராயப்படுவதும்

கூட அமைச்சரவை அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அமைச்சரவையினால் பரிசீலனை செய்யப்பட்ட 2,408 அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் தொடர்பிலான அமைச்சரவைத் தீர்மானங்கள் இந்த அலுவலகத்தினால் மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்டு அத்தீர்மானங்களை நடைமுறைப்படுத்தும் பொறுப்புடைய இயைபுள்ள அமைச்சுகளுக்கும் பிற இயைபுள்ள நிறுவனங்களுக்கும் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது.

4.2 **அமைச்சரவை உபகுழுக்களுக்குரிய பணிகள் :**

(அ) **தாபன விடயங்கள் பற்றிய அமைச்சரவை உபகுழு :**

அரசியலமைப்பின் நியதிகளின் பிரகாரம் பின்வரும் தத்துவங்கள் அமைச்சரவைக்கு கையளிக்கப்பட்டுள்ளன :

(i) அரசியலமைப்பின் 55 (1) ஆம் துணை உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அரசாங்க சேவைகள் தொடர்பிலான சகல கொள்கைத் தீர்மானங்களைத் தயாரித்தல்:

(ii) அரசியலமைப்பின் 55 (2) ஆம் துணை உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் திணைக்களத் தலைவர்களை நியமித்தலும் சகல தாபனப் பணிகளை நிறைவேற்றுதலும்.

இந்த பணிகளை நிறைவேற்றுவதில் மிகப் பொருத்தமான தீர்மானங்களை அமைச்சரவை எடுப்பதற்கு வசதியளிப்பதன் பொருட்டு இந்த விஞ்ஞாபனங்களை ஆழமாக ஆராய்ந்து அமைச்சரவைக்கு அறிக்கையிடுவதன் பொருட்டு பின்வரும் சிரேட்ட அமைச்சர்களைக் கொண்ட தாபன விடயங்கள் பற்றிய அமைச்சரவை உபகுழுவானது 2011 ஆம் ஆண்டில் செயற்பட்டது.

(i) மாண்புமிகு ரத்னசிறி விக்ரமநாயக்க அவர்கள்,
நல்லாட்சி மற்றும் உட்கட்டமைப்பு பற்றிய (சிரேட்ட) அமைச்சர் (தலைவர்);

(ii) மாண்புமிகு டி.ஈ.டபிள்யு.குணசேக்கர அவர்கள்,
மனித வளங்கள் பற்றிய (சிரேட்ட) அமைச்சர்;

(iii) மாண்புமிகு அதாவுத செனெவிரத்ன அவர்கள்,
கிராமிய அலுவல்கள் பற்றிய (சிரேட்ட) அமைச்சர்;

(iv) மாண்புமிகு நிமல் சிறிபால த சில்வா அவர்கள்,
நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சர்;

(v) மாண்புமிகு மைத்திரிபால சிறிசேன அவர்கள்,
சுகாதார அமைச்சர்;

(vi) மாண்புமிகு ஏ.எல்.எம்.அதாவுல்லா அவர்கள்,
உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர்;

(vii) மாண்புமிகு ரவூப் ஹக்கீம் அவர்கள்,
நீதி அமைச்சர்;

(viii) மாண்புமிகு டபிள்யு.டீ.ஜே.செனெவிரத்ன அவர்கள்,
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சர்;

(ix) மாண்புமிகு பந்துல குணவர்த்தன அவர்கள்,
கல்வி அமைச்சர்;

(x) மாண்புமிகு ஜனக்க பண்டார தென்னக்கோன் அவர்கள்,
காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்; அத்துடன்

(xi) மாண்புமிகு சந்திரசிறி கஜதீர அவர்கள்,
புனர்வாழ்வளிப்பு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர்.

2011 ஆம் ஆண்டில் தாபன விடயங்கள் பற்றிய அமைச்சரவை உபகுழுவின் விடயநோக்கெல்லைக்குட்பட்ட 1,042 விஞ்ஞாபனங்கள் பல்வேறு அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததோடு, இந்த விஞ்ஞாபனங்கள் யாவும் பரிசீலனை செய்யப்பட்டதன் பின்னர், தாபன விடயங்கள் பற்றிய அமைச்சரவை உபகுழுவின் சிபாரிசுகளை அமைச்சரவைக்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த செயற்பாட்டிற்கு அமைச்சரவைச் செயலாளரின் தலைமைத்துவத்தின் கீழ் தாபனப் பணிப்பாளர் நாயகம், இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம், நிதி, திட்டமிடல் அமைச்சின் சிரேட்ட உத்தியோகத்தர்கள் ஆகியோர்களைக் கொண்ட குழு அமைச்சரவை உபகுழுவுக்கு ஒத்துழைப்பு வழங்கியதோடு, தேவையான விடத்து தேசிய சம்பளங்கள், பதவியணிகள் ஆணைக்குழுவின் சிபாரிசுகளைப் பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டதோடு, அமைச்சரவை உபகுழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட சிபாரிசுகள் அமைச்சரவையினால் பரிசீலனை செய்யப்பட்டு 959 அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் சம்பந்தமாக அதன் தீர்மானங்கள் வழங்கப்பட்டதுடன், இயைபுள்ள அமைச்சுகளுக்கும் ஏனைய பிற நிறுவனங்களுக்கும் நடைமுறைப்படுத்தப்படுவதற்காக இந்தத் தீர்மானங்கள் அமைச்சரவை அலுவலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்துடன் கூடுதலாக அமைச்சரவையினால் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய அரசியலமைப்பின் பதினேழாவது திருத்தத்தின் 55 (3) ஆம் துணை உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் சகல திணைக்களத் தலைவர்களினதும் நியமனங்கள் தொடர்பிலும் 55 (4) ஆம் துணை உறுப்புரையின் கீழுள்ள அரசாங்க உத்தியோகத்தர்கள் தொடர்பிலும் சகல கொள்கை ரீதியிலான விடயங்கள் தொடர்பிலும் தீர்மனங்களை எடுப்பதற்கான சிபாரிசுகளை அமைச்சரவைக்குச் சமர்ப்பிப்பதும் தாபன விடயங்கள் பற்றிய அமைச்சரவை உபகுழுவிற்கு பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது .

அப்போததைய அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினதும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினதும் உத்தியோகபூர்வ பதவிக் காலம் முடிவடைந்ததன் பின்னர், தற்காலிகமாக எடுக்கப்பட்ட இடைக்கால நடவடிக்கையொன்றாக இந்த இரு ஆணைக்குழுக்களினாலும் நிறை வேற்றப்பட்ட பணிகள் இந்த ஆணைக்குழுக்கள் மீளத்தாபிக்கப்படும் வரைக்கும் அரசாங்க சேவை சுமுகமாக நடைபெறுவதை உறுதிப் படுத்துவதன் பொருட்டு இந்த ஆணைக்குழுக்களின் பணிகள் அமைச்சரவையினால் கையாளப்பட வேண்டுமென 2009 மே மாதம் 06 ஆம் திகதியன்று நடாத்தப்பட்ட அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைவாக 2011 ஆண்டில் இந்த ஆணைக் குழுக்களுக்கு கையளிக்கப்பட்டிருந்த பணிகளுக்குரியதான விடயங்கள்

சம்பந்தமாகவும் பரீசீலனை செய்யப்பட்டு அதன் சிபாரிசுகள் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்படுவதும்கூட தாபனப் பணிகள் பற்றிய அமைச்சரவை உபகுழுவிற்கு கையளிக்கப்பட்டிருந்தது.

இதற்கமைவாக அரசியலமைப்பின் பதினேழாவது திருத்தத்தின் 55 (I) ஆம் துணை உறுப்புரைக்கு அமைவாக அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவினால் இதுவரை நிறைவேற்றப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்களின் நியமனங்கள், பதவியுயர்வுகள், இடமாற்றங்கள், ஒழுக்காற்று நடவடிக்கைகள், சேவையிலிருந்து நீக்குதல் சம்பந்தமான பணிகளும் கூட 2011 ஆம் ஆண்டில் அமைச்சரவையினால் நிறைவேற்றப்பட்டது. 2010-09-09 ஆம் திகதியன்று அரசியலமைப்பிற்கான பதினெட்டாவது திருத்தம் அங்கீகரிக்கப்பட்டிருந்தபோதிலும், 2011-05-13 ஆம் திகதியன்று அரசாங்க சேவைகள் ஆணைக்குழு மீள நியமிக்கப்படும் வரைக்கும் மேற்போந்த பணிகள் தாபன விடயங்கள் பற்றிய அமைச்சரவை உபகுழுவின் சிபாரிசுகளின் அடிப்படையில் அமைச்சரவையினால் நிறைவேற்றப்பட்டன.

2011 ஆம் ஆண்டில் தாபன விடயங்கள் பற்றிய அமைச்சரவை உபகுழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட 1,042 அமைச்சரவை விஞ்ஞாபனங்களில் அரசியலமைப்பின் பிரகாரம் அமைச்சரவையினால் கையாளப்படுவதற்காக கிடைக்கப் பெற்ற விஞ்ஞாபனங்களும் மற்றும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ பதவிக் காலம் முடிவுற்றதன் காரணமாக அமைச்சரவையினால் நிறைவேற்றப்படுவதற்காக கிடைக்கப் பெற்ற தாபன விடயங்கள் பற்றிய விஞ்ஞாபனங்களும் பின்வருமாறு வகைப்படுத்தப்படலாம்.

**அரசியலமைப்பின் ஏற்பாடுகளின் பிரகாரம் அமைச்சரவையினால் நிறைவேற்றப்படுவதற்காகவும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ பதவிக்காலம் முடிவடைந்ததன் காரணமாக 2011 ஆம் ஆண்டில் அமைச்சரவையினால் நிறைவேற்றப்படுவதற்காகவும் கிடைக்கப் பெற்ற பிரேரிப்புகள் தொடர்பிலான வகைப்படுத்தல்**

| காலப்பகுதி | நடாத்தப்பட்ட அமைச்சரவைக் கூடட்டங்களின் எண்ணிக்கை | நடாத்தப்பட்ட அமைச்சரவை உபகுழு கூடட்டங்களின் எண்ணிக்கை | அரசியலமைப்பின் பிரகாரம் அமைச்சரவையினால் கையாளப் படுவதற்காக கிடைக்கப்பெற்ற விஞ்ஞாபனங்கள் | அரசியலமைப்பின் பிரகாரம் அமைச்சரவையினால் தீர்மானங்கள் எடுக்கப்பட்ட பிரேரிப்புகளின் எண்ணிக்கை | அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ காலம் முடிவுற்றதன் காரணமாக அமைச்சர வைக்கு சமர்ப்பிக்கப் பட்ட பிரேரிப்புகளின் எண்ணிக்கை | அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ பதவிக்காலம் முடிவுற்றதன் காரணமாக அமைச்சர வைக்கு சமர்ப்பிக்கப் பட்ட பிரேரிப்புகளில் இருந்து தீர்மானம் எடுக்கப்பட்ட விஞ்ஞாபனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| 2011-01-01 ஆம் திகதியிலிருந்து 2011-05-12 ஆம் திகதி வரை | 15 | 13 | 132 | 124 | 578 | 503 |
| 2011-05-13 ஆம் திகதியிலிருந்து 2011-12-31 ஆம் திகதி வரை (அரசாங்க சேவைகள் ஆணைக்குழு தாபிக்கப் பட்டதன் பின்னர்) | 26 | 18 | 332 | 332 | - | - |
| **மொத்தம்** | **41** | **31** | **464** | **456** | **578** | **503** |

தாபன விடயங்கள் பற்றிய அமைச்சரவை உபகுழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட விஞ்ஞாபனங்களின் எண்ணிக்கை - 464 + 578 = 1042

அமைச்சரவைக்கு சிபாரிசு செய்யப்பட்டவைகளும் அங்கீகரிக்கப்பட்டவைகளுமான பிரேரிப்புகளின் எண்ணிக்கை - 456 + 503 = 959

(ஆ) **சட்டவாக்கம் பற்றிய அமைச்சரவை உபகுழு:**

புதிதாக சட்டத்தை ஆக்குவதற்கு அல்லது ஏற்கனவேயுள்ள சட்டங்களைத் திருத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரத்துடன் பாராளுமன்றத்திற்குச் சமரப்பிக்கப்படவுள்ள சட்டமூலங்களை ஆழமாக ஆராயந்து சிபாரிசுகளை அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கும் பொருட்டு பின்வரும் அமைச்சர்களைக் கொண்ட அமைச்சரவை உபகுழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது:

(i) மாண்புமிகு சுசில் பிரேமஜயந்த அவர்கள்,
பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சர் - (தலைவர்)

(ii) மாண்புமிகு (கலாநிதி) சரத் அமுனுகம அவர்கள்,
சர்வதேச நாணய ஒத்துழைப்பு பற்றிய (சிரேட்ட) அமைச்சர்;

(iii) மாண்புமிகு தினேஷ் குணவர்த்தன அவர்கள்,
நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சர்;

(iv) மாண்புமிகு ரவூப் ஹக்கீம் அவர்கள்,
நீதி அமைச்சர்;

(v) மாண்புமிகு பசில் ராஜபக்ஷ அவர்கள்,
பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்;

(vi) மாண்புமிகு வாசுதேவ நாணயக்கார அவர்கள்,
தேசிய மொழிகள், சமூக ஒருங்கிணைப்பு அமைச்சர்;

(vii) மாண்புமிகு டபிள்யு.டீ.ஜே.செனெவிரத்ன அவர்கள்,
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சர்;

(viii) மாண்புமிகு (திருமதி) பவித்திரா வன்னிஆரச்சி அவர்கள்,
தொழில்நுட்ப, ஆராய்ச்சி அமைச்சர்;

(ix) மாண்புமிகு அநுர பிரியதர்ஷன யாப்பா அவர்கள்,
சுற்றாடல் அமைச்சர்; அத்துடன்

(x) மாண்புமிகு டிலான் பெரேரா அவர்கள்,
வெளிநாட்டு வேலைவாய்ப்பு, நலனோம்பல் அமைச்சர்.

சொல்லப்பட்ட இந்த உபகுழுவிற்கு உதவி வழங்குவதன் பொருட்டு நீதி அமைச்சின் செயலாளரையும் இயைபுள்ள அமைச்சுகளின் பிரதிநிதிகளையும் கொண்ட உத்தியோகத்தர் குழுவொன்று 2011 ஆம் ஆண்டில் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்டது.

சட்டவாக்கம் பற்றிய அமைச்சரவை உபகுழுவுக்கு 2011 ஆம் ஆண்டில் பத்து (10) அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் தொடர்புபடுத்தப்பட்டதோடு, இதில் நான்கு (04) விஞ்ஞாபனங்கள் மீது சிபாரிசுகள் வழங்கப்பட்டன. அதன் பின்னர் இந்த சிபாரிசுகள் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டதோடு, அமைச்சரவைத் தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதற்காக இயைபுள்ள அமைச்சுக்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

(இ) **மின்வலு, சக்தி பற்றிய அமைச்சரவை உபகுழு :**

மின்வலு, சக்தி பற்றிய கொள்கை, பெற்றோலிய உற்பத்திகளின் கொள்வனவு மற்றும் விநியோகம் ஆகியவற்றின் செயற்பாட்டை மேற்பார்வை செய்வதற்காக பின்வரும் மாண்புமிகு அமைச்சர்களைக் கொண்ட அமைச்சரவை உபகுழுவொன்று 2011 யூலை மாதம் 27 ஆம் திகதியன்று நியமிக்கப்பட்டுள்ளது.

(i) மாண்புமிகு ஏ.எச்.எம்.பௌஸி அவர்கள்,
நகர அலுவல்கள் பற்றிய (சிரேட்ட) அமைச்சர் - (தலைவர்);

(ii) மாண்புமிகு சுசில் பிரேமஜயந்த அவர்கள்,
பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சர்;

(iii) மாண்புமிகு பாட்டலி சம்பிக்க றணவக்க அவர்கள்,
மின்வலு, சக்தி அமைச்சர்;

(iv) மாண்புமிகு டபிள்யு.டீ.ஜே.செனெவிரத்ன அவர்கள்,
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ; அத்துடன்

(v) மாண்புமிகு டிலான் பெரேரா அவர்கள்,
வெளிநாட்டு வேலைவாய்ப்பு, நலனோம்பல் அமைச்சர்.

நிதி, திட்டமிடல் அமைச்சின் செயலாளர் அல்லது அவருடைய பிரதிநிதி, சிரேட்ட அமைச்சர்களுக்கான செயலகத்தின் இணை - பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர், பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சின் செயலாளர், மின்வலு, சக்தி அமைச்சின் செயலாளர், இலங்கை மின்சாரசபையின் தலைவர், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பொதுமுகாமையாளர் ஆகியோர்கள் இந்த உபகுழுவிற்கு ஒத்தாசை வழங்குகின்றனர். 2011 ஆம் ஆண்டில் இந்த உபகுழுவின் 22 சிபாரிசுகள் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன், அதன் பின்னர் அமைச்சரவைத் தீர்மானங்கள் நடைமுறைப் படுத்தப்படுவதற்காக இயைபுள்ள அமைச்சுகள் மற்றும் நிறுவனங்களுக்குத் அனுப்பப்பட்டன.

(ஈ) **தனிப்பட்ட உறுப்பினர் சட்டமூலங்களை பரிசீலனை செய்து, சிபாரிசுகளை சமர்ப்பிப்பதன் பொருட்டு நியமிக்கப்பட்டுள்ள சிரேட்ட அமைச்சர்கள் அடங்கிய உபகுழு :**

2011-06-08 ஆம் திகதியிட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் தனிப்பட்ட உறுப்பினர் சட்டமூலங்களாக சமர்ப்பிக்கப்படுகின்ற சட்டமூலங்களை பரிசீலனை செய்து தனது சிபாரிசுகளை சமர்ப்பிக்கும் பொருட்டு, நல்லாட்சி மற்றும் உட்கட்டமைப்பு பற்றிய (சிரேட்ட) அமைச்சராகிய மாண்புமிகு ரத்னசிறி விக்ரமநாயக்கவின் தலைமைத்துவத்தின் கீழ் சகல சிரேட்ட அமைச்சர்களையும் உள்ளடக்கியதான அமைச்சரவை உபகுழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

மேற்போந்த உபகுழுவினால் 2011 ஆம் ஆண்டில் 15 பாராளுமன்ற உறுப்பினர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 16 தனிப்பட்ட உறுப்பினர்கள் சட்டமூலங்களில் சிபாரிசு கிடைக்கப் பெற்ற 04 சட்டமூலங்கள் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டதோடு, இவற்றிற்கான தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப் படுவதற்காக இயைபுள்ள அமைச்சுகள் மற்றும் நிறுவனங்களுக்குத் தொடர்புபடுத்தப்பட்டன.

4.3 **பல்வேறு விடயங்கள் சம்பந்தமாக ஆராய்ந்து சிபாரிசுகள் சமர்ப்பிக் கப்படுவதற்காக அமைச்சரவையினால் நியமனம் செய்யப்படும் உத்தியோ கத்தர்கள் குழுக்களின் கடமைகள் :**

23 அமைச்சுகளினால் சமர்ப்பிக்கப்பட்ட 43 விஞ்ஞாபனங்களைப் பற்றி ஆராய்ந்து சிபாரிசுகளை சமர்ப்பிப்பதற்காக அமைச்சரவையினால் 43 உத்தியோகத்தர் குழுக்கள் 2011 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்டதோடு, இதில் 24 குழுக்கள் சமர்ப்பித்த அறிக்கைகள் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அதன் பின்னர் அமைச்சரவைத் தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதற்காக இயைபுள்ள அமைச்சுகளுக்கும் நிறுவனங்களுக்கும் தொடர்புபடுத்தப்பட்டன.

4.4 **அதிமேதகைய சனாதிபதியினால் அல்லது அமைச்சரவையினால் குறித்தொதுக்கப்பட்ட விசேட பணிகள் :**

பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனங்களை மேலும் ஆராய்ந்து அமைச்சரவைக்கு விடய முன்வைப்புகளைச் செய்யுமாறு அமைச்சரவைச் செயலாளருக்கு அமைச்சரவையினால் அவை குறித்தொதுக்கப்பட்டதுடன், இது தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்ட சிபாரிகளின் அடிப்படையில் அமைச்சரவையினால் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதற்காக இயைபுள்ள அமைச்சுக்களுக்கும் நிறுவனங்களுக்கும் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது.

(i) அரசியலமைப்பின் பதினெட்டாவது திருத்தத்தின் விளைவாக அரசியலமைப்பின் 57(1) ஆம் துணை உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சில அதிகாரங்கள் கையளிக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர்கள் யாவர் என்பதை தீர்மானிப்பதற்கு அமைச்சரவைக்கு உதவி வழங்குதலும் இது தொடர்பிலான வரைவு வர்த்தமானி அறிவித்தலைத் தயாரித்தலும்.

அரசியலமைப்பிற்கான பதினெட்டாவது திருத்தத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55 (1) ஆம் துணை உறுப்புரையின் கீழ், அமைச்சரவையினால் அரசாங்க உத்தியோகத்தர்களின் நியமனங்கள், பதவியுயர்வுகள், இடமாற்றங்கள், ஒழுக்காற்று நடவடிக்கை, சேவையிலிருந்து நீக்குதல் ஆகியவற்றை உள்ளடக்கி அரசாங்க உத்தியோகத்தர்களுக்குரிய சகல கொள்கை விடயங்கள் அமைச்சரவையினால் கையாளப்பட வேண்டியள்ளது. 55(2) ஆம் துணை உறுப்புரைக்கு அமைவாக சகல திணைக்களத் தலைவர்களினதும் (மாவட்ட செயலாளர்கள் அடங்கலாக) நியமனங்கள் பதவியுயர்வுகள், இடமாற்றங்கள், ஒழுக்காற்று நடவடிக்கை, சேவையிலிருந்து நீக்குதல் ஆகிய அதிகாரங்களும் அமைச்சரவைக்கு கையளிக்கப்பட்டுள்ளன.

அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமைவாக அதிமேதகைய சனாதிபதியினால் நியமிக்கப்படும் உத்தியோகத்தர்களும் அரசியலமைப்பின் 55(2) ஆம் துணை உறுப்புரைக்கு அமைவாக அமைச்சரவையினால் நியமனம் செய்யப்படும் உத்தியோகத்தர்களும் நீங்கலாக இலங்கை பொலிஸ் உத்தியோகத்தர்களையும் உள்ளடக்கி அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு உட்பட்டு ஏனைய சகல அரசாங்க உத்தியோகத்தர்களினதும் நியமனங்கள், பதவியுயர்வுகள், இடமாற்றங்கள், ஒழுக்காற்று நடவடிக்கைகள், சேவையிலிருந்து நீக்குதல் ஆகிய அதிகாரங்கள் அரசியலமைப்பின் ஏற்பாடுகளின் கீழ் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு கையளிக்கப்பட்டுள்ளன. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நோக்கெல்லைக்குட்பட்ட ஏனைய சகல அரசாங்க உத்தியோகத்தர்கள் தொடர்பிலான தாபனப் பணிகள் யாவும் இந்த ஆணைக்குழுவினால் கையாளப்படுவது சாத்தியப்படாத விடய மொன்றாகையினால், இந்தக் கடமைகளில் ஒரு பகுதியானது அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் இயைபுள்ள அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் அமைச்சரவையின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு குறித்தொதுக்கப்பட்டுள்ளன. இதற்கமைவாக

அரசியலமைப்பின் 57 (1) ஆம் துணை உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் குறித்த உத்தியோகத்தர் ஒருவருக்கு குறித்தொதுக்கப்படவுள்ள உத்தியோகத்தர்களின் வகுதி சம்பந்தப்பட்ட அதிகாரங்களை கையளித்தல் தொடர்பிலான இந்தப் பிரேரிப்பு மீது சேவை ஒவ்வொன்றினதும் அதிகாரபீடங்களினதும் திணைக்களங்களின் தலைவர் களுடனும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவுடனும் தாபனப் பணிப்பாளர் அதிபதியுடனும் விரிவான கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டதுடன், அவதானிப்புரைகளும் செய்யப்பட்டன. இந்த விடயத்தில் அதிகாரங்களைக் கையளித்தல் அது மேலே குறிப்பிடப்பட்ட முன்னைய வர்த்தமானி அறிவித்தல்களின் நியதிகளின் பிரகாரம் எடுக்கப்பட்ட சட்டபூர்வமான நடவடிக்கைகளை பாதிக்காத விதத்தில் செய்யப்பட்டுள்ளது. இந்த நடைமுறையின் போது முன்னைய அமைச்சரவைத் தீர்மானங்களையும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் விதிகளையும் வர்த்தமானி அறிவித்தல்களையும் ஏனைய தொடர்புடைய சட்டங்களையும் நுண்ணாய்வு செய்வதில் அமைச்சரவைச் செயலாளரினாலும் பதவியினர்களினாலும் கணிசமான காலப்பகுதியை செலவளிக்க வேண்டியதாகவிருந்தது. இவ்வண்ணம் வகுக்கப்பட்ட சிபாரிசுகள் 2011-11-16 ஆம் திகதியன்று அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டதுடன் அவை 2011-11-25 ஆம் திகதியிடப்பட்டதும் 1733/52 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.

சொல்லப்பட்ட இந்த அதிகாரக் குறித்தொதுக்கல் 2003-07-02 ஆம் திகதயிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட அதிகாரக் குறித்தொதுக்கலிலிருந்தும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் 2006-06-13 ஆம் திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட அதிகாரக் குறித்தொதுக்கலிலிருந்தும் வேறுபட்ட ஓர் அதிகாரக் குறித்தொதுக்கலாகும்.

(ii) மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் ஊக்குவிப்பதற்குமான தேசிய திட்டம் 2011-2016 பற்றி ஆராய்ந்து அமைச்சரவைக்கு அறிக்கையிடுவதற்காக சனாதிபதியின் செயலாளரின் தலைமைத்துவத்தின் கீழ் தாபிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் குழுவிற்கு தேவையான உதவியை வழங்குதலும் திருத்தப்பட்ட வரைவு திட்டத்தைத் தயாரித்தலும்:

“மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் ஊக்குவிப்பதற்குமான தேசிய திட்டம் 2011-2016” பற்றி மாண்புமிகு பெருந்தோட்டத் தொழில் அமைச்சர் சமர்ப்பித்த 2011-06-13 ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் இதற்குரியதாக இதுவரை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள சில செயற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளதென்பதுவும் 2009 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட வேலைத்திட்டமொன்றுக்கமைய சமர்ப்பிக்கப்பட்ட இந்த திட்டத்தில் சில முன்னுரிமை அடிப்படைகள் தற்போது மாறியுள்ளதென்பதுவும் அமைச்சரவையினால் அவதானிக்கப்பட்டதுடன், இந்த செயற்பாட்டுத் திட்டத்தை மீளவும் ஆராய்ந்து தேவையான திருத்தங்களுடன் சமர்ப்பிப்பிக்கும் பணியானது உத்தியோகத்தர்கள் குழுவொன்றுக்கு கையளிக்கப்பட்டது. இந்த செயற்பாட்டுத் திட்டம் 2011 செப்டம்பர் மாதம் நடாத்தப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கப்படவிருந்தமையினால், இயைபுள்ள திருத்தங்களை மிகத்

துரிதமாக செய்யவேண்டியிருந்தது. இதற்கமைவாக, முன்னாள் சட்டமா அதிபரும் அமைச்சரவையின் சிரேட்ட சட்ட ஆலோசகருமான திரு.மொஹான் பீரிஸினதும் குழுவின் ஏனைய உறுப்பினர்களினதும் இயைபுள்ள உத்தியோகத்தர்களினதும் கருத்துரைகளை அறிந்து இந்த அறிக்கையை திருத்தியமைத்து அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கும் பணியானது அமைச்சரவைச் செயலாளரின் தலைமையில் மிகக் குறுகிய காலப்பகுதியில் நிறைவேற்றப்பட்டது.

(iii) அரசாங்க சேவையில் வெற்றிடமாகவுள்ள பதவிகளை நிரப்புவதற்கான ஏற்படும் பிரச்சினைகள், இடமாற்றக் கொள்கை மற்றும் 60 வயதுக்கு மேற்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்களை பணிக்கமர்த்துவதற்கான கொள்கை ஆகியவற்றிற்கு ஏற்புடைத்தான 2011-08-17 ஆம் திகதியிடப்பட்டதும் அ.ப.இல.11/1541/558/038 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான அமைச்சரவைத் தீர்மானத்திற்கு ஏதுவாக அமைந்த பின்னணித் தகவல்களை அமைச்சரவைக்குச் சமர்ப்பித்தல் :

பலதரப்பட்ட சேவைகளுக்குரிய அரசாங்க உத்தியோகத்தர்கள் இளைப்பாறியதன் பின்னர், குறித்த பதவிகளில் தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வதில் நிலவும் கஷ்டங்களைக் குறிப்பிட்டு 60 வயதிற்கும் அப்பால் சேவையை நீடிப்பதற்காக அமைச்சுக்களினால் பெருமளவில் கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்படுகின்றமை கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டதன் பின்னர், இதற்கான கொள்கைத் தீர்மானமொன்றை எடுப்பதற்குத் தேவையான தகவல்கள் அதிமேதகைய சனாதிபதியின் ஊடாக அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டதோடு , இதற்கமைவாக, அமைச்சரவையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக அமைச்சுகளின் செயலாளர்களினாலும் திணைக்களத் தலைவர்களினாலும் பிற அரசாங்க நிறுவனங்களின் தலைவர்களினாலும் அவர்களுடைய மனிதவளத் தேவைகளை, பிற அபிவிருத்தித் திட்டங்களுடன் முன்கூட்டியே அறிந்துகொள்ளப்படுவதற்காகவும் எதிர்கால மனிதவளத் தேவைகளை ஒரே தடவையில் அறிந்துகொள்வதை இயலுமாக்கும் வகையிலும் அவர்களுடைய நிறுவனங்களில் உள்ள சகல உத்தியோகத்தர்களினதும் முக்கிய தகவல்களை பேணுதல், அவர்களுடைய நிறுவனங்களில் இளைப்பாறுவதனால் அல்லது பதவியுயர்வு வழங்கப் படுவதனால் வெற்றிடமாகும் பதவிகளுக்கு நியமிப்பதற்கு பொருத்தமான உத்தியோகத்தர்களை முன்கூட்டியே கண்டறிதல், எவரேனும் உத்தியோகத்தர் ஒருவர் இளைப்பாறும் போது அவருடைய பின் உரிமையாளர் ஒருவரை நியமிப்பதற்கு ஆகக்குறைந்தது ஒருவருட காலத்திற்கு முன்னரே நியமன அதிகாரிக்கு அறிவிக்கப்படுதல் அத்துடன் 06/2006 ஆம் இலக்கதைக் கொண்ட அரசாங்க நிருவாக சுற்றறிக்கைக்கமைவாக திருத்தப்படாமலிருந்த அந்தந்த சேவைகளுக்குரியதான சேவைப் பிரமாணக் குறிப்புகளையும் ஆட்சேர்ப்புத் திட்டங்களையும் துரிதமாகத் தயாரித்து அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தை பெற்றுக் கொண்டு நடைமுறைப்படுத்து வதற்குரிய வழிகாட்டல்கள் அமைச்சுகளின் செயலாளர்களுக்கும் திணைக்களத் தலைவர்களுக்கும் அமைச்சரவையின் அங்கீகாரதின் மீது அறிவிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

4.5 **அமைச்சரவை விஞ்ஞாபனங்களைத் தயாரித்தல், அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்படும் பல்வேறுபட்ட அறிக்கைகளைத் தயாரித்தல் ஆகியன சம்பந்தமாக அமைச்சுக்களுக்கு வழிகாட்டல்களை வழங்குதல்:**

அமைச்சரவை விஞ்ஞாபனங்களைத் தயாரிப்பதற்கும் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்படுகின்ற பல்வேறுபட்ட அறிக்கைகளைத் தயாரிப்பது தொடர்பிலும் அமைச்சுகளுக்கு காலத்துக்குக் காலம் வழிகாட்டல்களையும் அறிவுறுத்து ரைகளையும் வழங்குவது அமைச்சரவை அலுவலகத்திற்குரிய பொறுப்பாகும்.

அங்கீகாரம் எதிர்பார்க்கப்படுகின்ற விடயங்கள் அவற்றின் சட்டக் கொள்கைப் பின்னணிகள் மற்றும் மாற்றுப் பிரேரிப்புகள் போன்ற தகவல்களை உள்ளடக்கியதான அமைச்சரவைப் பத்திரங்களை ஒழுங்குபடுத்தவேண்டிய விதம் மற்றும் அந்தந்த விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கத்திற்கமைவாக விஞ்ஞாபனத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய பிற விடயங்கள் உள்ளடக்கப்பட்ட வழிகாட்டல்கள் அமைச்சரவை அங்கீகாரத்துடன் அதிமேதகைய சனாதிபதியின் ஒப்பத்துடன் அமைச்சரவையினால் சகல மாண்புமிகு அமைச்சர்களுக்கும் 2011-06-10 ஆம் திகதியன்று வழங்கப்பட்டது. இதன் மூலம் சகல அமைச்சுகளினாலும் அமைச்சரவைக்கு விஞ்ஞாபனங்களை சமர்ப்பிக்கும் போது பொதுவான முறையொன்று பேணப்படுவது உறுதிப்படுத்தப்படுகின்றது. குறித்த இந்த வழிகாட்டல்களின் பிரதி இணைப்பு 2 ஆக காண்பிக்கப்பட்டுள்ளது.

4.6 **அமைச்சரவை அலுவலகம் அமைந்துள்ள கட்டடத்தில் உபயோகப்படுத்தப் படாதிருந்த பகுதியொன்றை நவீனமயப்படுத்தி பதவியினர்களின் உபயோகத்திற்காக எடுத்துக் கொண்டமை:**

அமைச்சரவை அலுவலகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த வழமையான கடமைகளுடன் அமைச்சரவை அலுவலகத்திற்கு காலத்திற்கு காலம் கையளிக்கப் பட்ட விசேட பணிகளின் விளைவாக இந்த பணிகளுக்கு போதுமான விதத்தில் பதவியினர்களை அதிகரிக்கும் தேவை இந்த அலுவலகத்திற்கு ஏற்பட்டது. ஆயினும், அதிகரித்த பதவியினர்களுக்கு இடவசதி வழங்குவதில் பாரிய பிரச்சினை நிலவியது. இதற்காக மேலதிக இடவசதி வெளிவிவகார அமைச்சிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டவாறு கிடைக்காமையினால், இதற்கான மாற்று வழியொன்று தொடர்பில் கவனம் செலுத்தவேண்டிய நிலை ஏற்பட்டது. இதற்கமைவாக மேலதிக இடவசதியைப் பெற்றுக் கொள்வதற்காக அமைச்சரவை அலுவலகம் அமைந்துள்ள கட்டடத்தின் கீழ் பகுதியில் பல வருடங்களாக உபயோகப்படுத்தப்படாமலிருந்த இடவசதியை இதற்காக பயன்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

நில மட்டத்தைவிட கீழ் மட்டத்தில் அமைந்திருந்த இந்த இடவசதியானது அலுவலக உபயோகம் எதற்கும் பயன்படுத்தப்படாமல் கழிவுகள் போடப்பட்ட இடமாக இருந்ததோடு, இதன் விஸ்தீரணம் சுமார் 2,400 சதுர அடிகளாகும். இந்த இடவசதியை அலுவலக உபயோகத்திற்கு பயன்படுத்தப்படக் கூடிய விதத்தில் திருத்த வேலைகளைச் செய்வதற்கும் நவீன மயப்படுத்துவதற்குமான பணி தரைப்படையின் 7ஆவது பொறியியல் சேவைப் பிரிவிற்கு கையளிக்கப்பட்டது. இதற்கமைவாக, இந்த படைப்பிரிவினால் 2011-04-01 ஆம் திகதி இந்த நவீனமயப்படுத்தல் பணிகள் ஆரம்பிக்கப்பட்டதோடு, 4 மாதங்களைக் கொண்ட குறுகிய காலப்பகுதியில் நவீனமயப்படுத்தல் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு, பதவியினர்களின் பயன்பாட்டிற்காக இந்த இடவசதியை எடுத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதற்கு 7 மில்லியன் ரூபா செலவிடப்பட்டு தேவையான கட்டடப் பொருட்களும் உபகரணங்களும் அமைச்சரவை அலுவலகத்தினால் வழங்கப்பட்டதோடு, நவீனமயப்படுத்தல் பணிகளுக்கான மனிதவலு முழுமையாக இலவசமாக தரைப்படையின் 7ஆவது பொறியியல் சேவை படைப்பிரிவினால் வழங்கப்பட்டது.

5. **அமைச்சரவை அலுவலக பணிகளின் விசேட தன்மை :**

அமைச்சரவை அலுவலகத்திற்கு கையளிக்கப்பட்டுள்ள பணிகளின் விசேட தன்மையின் காரணமாக பல சந்தர்ப்பங்களில் ஏனைய அரசாங்க அலுவலகங்கள் செயலாற்றும் விதத்திலிருந்து புறம்பாக செயலாற்ற வேண்டியுள்ளது முக்கியமாக அமைச்சரவை கூட்டமொன்று நடாத்தப்பட்டு அடுத்த அமைச்சரவைக் கூட்டம் நடாத்தப்படுவதற்கான காலம் ஒருவார காலத்திற்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டுள்ளமையினால், இந்தக் காலப்பகுதியினுள் முன்னைய கூட்டத்திற்கான நிகழ்ச்சிக் குறிப்புகளை மும்மொழிகளிலும் தயாரித்தல், அடுத்த கூட்டத்திற்கான நிகழ்சசி நிரலில் சேர்ப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள அமைச்சரவை விஞ்ஞாபனங்களின் உள்ளடக்கங்கள் பற்றி ஆராய்ந்து தேவையான மேலதிக தகல்களை திரட்டுதல், இந்த விடயங்களுக்குரியதாக இதற்கு முன்னர் அமைச்சரவை தீரமானங்கள் எதுவும் எடுக்கப்பட்டிருப்பின் அது தொடர்பிலான தகவல்களை பரிசீலனை செய்தல், இந்த விஞ்ஞாபனங்களின் பொருளடக்கம் சம்பந்தமாக இயைபுள்ள அமைச்சுக்களுக்குப் பொறுப்பான மாண்புமிகு அமைச்சர்களிடமிருந்து அவதானிப்புரைகளை கோருதல் போன்ற பிற்போடப்பட முடியாத பல பணிகள் மிக குறுகிய காலப் பகுதியினுள் நிறைவேற்றப்பட வேண்டிய தேவை அமைச்சரவை அலுவலகத்தின் பதவியினர்களுக்கு உள்ளது. இந்த பணிகள் யாவற்றையும் புரிகையில் இவை சம்பந்தமான இரகசியத் தன்மையைப் பாதுகாத்தல் உத்தியோகத்தர்களின் பொறுப்பாவதோடு, இதனை உயர்மட்டத்தில் பேணி, வழமையான வார நாட்டகளில் அலுவலக நேரங்களின் பின்னர் இரவு வேளைகளிலும் கடமைகளைச் செய்வதற்கும், வார இறுதி நாட்களிலும் அரசாங்க விடுமுறைத் தினங்களிலும் கூட கடமை புரிவது அமைச்சரவை அலுவலகத்தின் பதவியினர்களுக்கு கட்டாயமானதாகியுள்ளது. இதன் காரணமாக அமைச்சரவை அலுவலகத்திற்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்யும் போது விசேடமாக தெரிவுசெய்யப்பட்ட உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதோடு, 2011 ஆம் ஆண்டில் அமைச்சரவை அலுவலகத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் தொடர்பிலான தகவல்கள் 3 ஆம் இணைப்பில் காட்டப்பட்டுள்ளது. விசேடமாக மொழி பெயர்ப்பாளர் சேவையில் உள்ள அனுபவமுள்ள மொழிபெயர்ப்பாளர்களின் பற்றாக்குறை காரணமாக மொழிபெயர்ப்பு பணிகளுக்காக தொடர்ந்தும் இரண்டு இளைப்பாறிய உத்தியோகத்தர்களின் சேவையை பெற்றுக் கொள்ளவேண்டிய நிலை உருவாகியுள்ளது.

## 6. நிதி மீளாய்வு

### 6.1 மதிப்பீடு

அமைச்சரவை அலுவலகத்தின் 2011 ஆம் ஆண்டிற்கான மீண்டுவரும் மூலதனச் செலவினத்தின் கீழ் மொத்த நிதி ஏற்பாடுகளும் மொத்த செலவினங்களும் பின்வருமாறாகும்.

| செலவினத்தின் தன்மை | மொத்த நிதி ஏற்பாடு ரூபா | உள்ளபடியான செலவு ரூபா | முன்னேற்றம் % | மீதி ரூபா | மீதி நூற்றுவீதம் |
|---|---|---|---|---|---|
| மீண்டுவரும் செலவினம் | 49,035,000 | 46,116,994 | 94 | 2,918,006 | 6 |
| மூலதனச் செலவினம் | 16,285,000 | 12,739,806 | 78 | 3,545,194 | 22 |
| மொத்தம் | 65,320,000 | 58,856,000 | 90 | 6,464,000 | 28 |

அமைச்சரவை அலுவலகத்தின் மீண்டுவருஞ் செலவினத்தின் நிதி முன்னேற்றம் 94 சதவீதமாக பதிவுசெய்யப்பட்டுள்ளதோடு, முன்னர் எதிர்பார்த்தவாறு சார்க் வலய அமைச்சரவைக் கூட்டம் நடாத்தப்படாமையினாலும் உத்தியோகத்தர்களுக்கு பொருத்தமானவாறு வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் கிடைக்காமையினாலும் இதற்காக குறித்தொதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் சேமிப்பு ஏற்பட்டது. அதே போன்று மாவட்ட மட்டத்தில் நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த அமைச்சரவைக் கூட்டங்கள் அவ்வாறு நடாத்தப்படாததன் காரணமாகவும் இதற்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடும் சேமிப்பாக காணப்பட்டது. இவை 6 சதவீதமான சேமிப்புக்கு பிரதான பங்கினை வகித்தன.

அமைச்சரவை அலுவலகம் அமைந்துள்ள கட்டடத்தின் நவீனமயப்படுத்தற் பணிகள் பாதுகாப்பு அமைச்சின் அங்கீரத்துடன் இலங்கை தரைப்படை பொறியியல் பிரிவினால் நிறைவேற்றப்பட்டமையினால் மதிப்பிடப்பட்ட மனிதவலுச் செலவுகள் பயன்படுத்தப் படாமையினாலும் மதிப்பீடுகள் தயாரிக்கப்படும் போது நிலவிய சந்தைவிலையை விட குறைந்த போட்டி விலையில் பல்பணி நிழற்படபிரதி இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்வதற்கு முடியுமானதாகவிருந்ததனாலும் மூலதன செலவில் 22 சதவீதத்திற்கு கூடுதலான சேமிப்பு ஏற்பட்டது.

### 6.2 உத்தியோகத்தர்களுக்காக கடன் முற்பணங்களை வழங்குதல்

2011 ஆம் ஆண்டில் அலுவலகத்தின் உத்தியோகத்தர்களுக்கு B முற்பணக் கணக்கின் கீழ் 1,736,101/- ரூபாவைக் கொண்ட கடன் தொகை வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டிற்குள் எல்லைத் திருத்தமொன்றின் மூலம் கூடுதலான உத்தியோகத்தர்களுக்கு கடன் பெறும் வாய்ப்பு கிடைத்துள்ளது. கடன் வழங்கப்பட்டவிதம் பின்வருமாறாகும்.

| வழங்கப்பட்ட கடன் வகை | உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை | கடன் தொகையின் அளவு |
|---|---|---|
| இடர் கடன் | 24 | 1322701 |
| துவிச்சக்கர வண்டி கடன் | 2 | 12000 |
| விழா முற்பணம் | 50 | 250000 |
| விசேட முற்பணம் | 32 | 80000 |
| விசேட கடன் (வெள்ளம்) | 1 | 71400 |
| **வழங்கிய மொத்த கடன் தொகை** | | 1736101 |

## 6.3 தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்தல்

அமைச்சரவை அலுவலகத்தில் நிலவும் நாளாந்த அலுவலகப் பணிகளின் போது பெருமளவில் நிழற்பட பிரதிகள் எடுக்கப்படுவதோடு, இதற்காகவிருந்த குறைந்த ஆற்றலுடைய நிழற்படப் பிரதியெடுத்தல் இயந்திரத்திற்குப் பதிலாக குறுகிய காலத்தில் கூடிய எண்ணிக்கையில் நிழற்பட பிரதிகளை எடுக்கக் கூடியவாறு நவீன தொழினுட்ப பாகங்களுடனான நிழற்படப் பிரதியெடுத்தல் இயந்திரமொன்றை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது விஞ்ஞாபனப் பிரிவின் பணிகளை நிறைவேற்றுவதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. பயன்படுத்த முடியாத நிலையிலுள்ள தளபாடங்கள், உபகரணங்கள் மற்றும் கணனிகளுக்காக புதிய அலுவலக தளபாடங்களும் உபகரணங்களும் கணனிகளும் 2 மில்லியன் ரூபா செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

## 6.4 வருடாந்த கணக்குகளை சமர்ப்பித்தல்

2011 ஆம் ஆண்டிற்காக அமைச்சரவை அலுவலகத்தினால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய வருடாந்த ஒதுக்கீட்டுக் கணக்கு (4 ஆம் இணைப்பு) மற்றும் B முற்பணக் கணக்கு (5 ஆம் இணைப்பு) கணக்காய்வாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன.

## 6.5 வருடாந்த பொருட்களின் அளவு ஆய்வு

2011 ஆம் ஆண்டின் வருடாந்த பொருட்களின் அளவு ஆய்வுப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு கணக்காய்வாளர் நாயகத்திற்கு அறிக்கையிடப்பட்டுள்ளது.

## 6.6 கணக்காய்வு விசாரணைகள்

2011 ஆம் ஆண்டிற்கான சகல கணக்காய்வு விசாரணைகளுக்கான பதில்கள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**இணைப்பு 1**

## 2011 ஆம் ஆண்டில் அமைச்சுக்கள் ஒவ்வொன்றினாலும் அமைச்சரவை அலுவலகத்திற்கு அனுப்பப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனங்கள்

| அமைச்சுக்கள் | அமைச்சரவை அலுவலகத்தின் மூலம் அமைச்சுகளுக்கு வழங்கப்பட்ட இலக்கம் | கிடைக்கப் பெற்ற அமைச்சரவை விஞ்ஞாபனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| அதிமேதகைய சனாதிபதி அவர்கள் | 501 | 32 |
| பிரதம அமைச்சர் | 502 | 10 |
| பாதுகாப்பு , நகர அபிவிருத்தி அமைச்சு | 503 | 133 |
| நிதி, திட்டமிடல் அமைச்சு | 504 | 205 |
| துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சு | 505 | 67 |
| புத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சு | 506 | 19 |
| சிரேட்ட அமைச்சர்களுக்கான செயலகம் | 507 | 42 |
| நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சு | 508 | 48 |
| சுகாதார அமைச்சு | 509 | 178 |
| பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சு | 510 | 35 |
| கால்நடைவளர்ப்பு, கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு | 511 | 36 |
| நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சு. | 512 | 53 |
| பாரம்பரிய கைத்தொழில்கள், சிறுதொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சு | 513 | 23 |
| உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சு | 514 | 56 |
| கைத்தொழில், வர்த்தக அலுவல்கள் அமைச்சு | 515 | 43 |
| மின்வலு, சக்தி அமைச்சு | 516 | 61 |
| நிருமாண, பொறியியல்சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சு | 517 | 56 |
| நீதி அமைச்சு | 518 | 30 |
| பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | 519 | 43 |
| தேசிய மொழிகள், சமூக ஒருங்கிணைப்பு அமைச்சு | 520 | 14 |
| உயர் கல்வி அமைச்சு | 521 | 61 |
| வெளிவிவகார அமைச்சு | 522 | 64 |
| பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு | 523 | 156 |
| பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு | 524 | 5 |
| அஞ்சல் சேவைகள் அமைச்சு | 525 | 36 |
| தொழில்நுட்ப, ஆராய்ச்சி, அணுசக்தி அமைச்சு | 526 | 23 |
| சுற்றாடல், மீள் புதுப்பித்தல் சக்தி அமைச்சு | 527 | 32 |
| சிறுவர் அபிவிருத்தி, மகளிர் விவகார அமைச்சு | 528 | 05 |
| தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு | 529 | 27 |

| | | |
|---|---|---|
| கல்வி அமைச்சு | 530 | 78 |
| பெருந்தோட்டத் தொழில் அமைச்சு | 531 | 25 |
| கடற்றொழில், நீரகவளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சு | 532 | 39 |
| காணி, காணி அபிவிருத்தி அமைச்சு | 533 | 33 |
| சமூக சேவைகள் அமைச்சு | 534 | 24 |
| தனியார் போக்குவரத்துச் சேவைகள் அமைச்சு. | 535 | 10 |
| கமத்தொழில் அமைச்சு | 536 | 53 |
| ஊடகத்துறை, தகவல் அமைச்சு | 537 | 30 |
| போக்குவரத்து அமைச்சு | 538 | 79 |
| இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி | 539 | 38 |
| கூட்டுறவு, உள்நாட்டு வியாபார அமைச்சு | 540 | 38 |
| புனர்வாழ்வளிப்பு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு. | 541 | 23 |
| சுதேச மருத்துவத்துறை அமைச்சு | 542 | 19 |
| சிறு ஏற்றுமதிப் பயிர் ஊக்குவிப்பு அமைச்சு | 543 | 14 |
| வெளிநாட்டு வேலைவாய்ப்பு, நலனோம்பல் அமைச்சு | 544 | 05 |
| சிவில் விமானச் சேவைகள் அமைச்சு | 545 | 21 |
| தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி | 546 | 08 |
| கலாசாரம், கலைகள் விவகார அமைச்சு | 547 | 29 |
| அனர்த்த முகாமைத்துவ அமைச்சு | 548 | 18 |
| கமநலச் சேவைகள் மற்றும் வனசீவராசிகள் அமைச்சு | 549 | 36 |
| மீள் குடியமர்த்தல் அமைச்சு | 550 | 15 |
| பொதுசன உறவுகள் மற்றும் பொதுசன அலுவல்கள் அமைச்சு. | 551 | 02 |
| விளையாட்டுத்துறை அமைச்சு | 552 | 25 |
| அரசவளங்கள், தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சு | 553 | 45 |
| தொலைத்தொடர்புகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப | 554 | 04 |
| தேசிய மரபுரிமைகள் அமைச்சு | 555 | 21 |
| உற்பத்திவள ஊக்குவிப்பு அமைச்சு | 556 | 11 |
| அரசாங்க முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சு | 557 | 10 |
| அமைச்சரவைச் செயலாளர் | 558 | 60 |
| மாகாண சபைகள் | 559 | 02 |
| **மொத்தம்** | | **2408** |

ෆැක්ස් අංකය
தொலைநகல்
Fax No.
2323730
2389151

ඊ-මේල්
மின்னஞ்சல்
E-mail
info@cabinetoffice.gov.lk

වෙබ් අඩවිය
வெப் தளம்
Web Site
www.CabinetOffice.gov.lk

අමාත්‍ය මණ්ඩල කාර්යාලය
அமைச்சரவை அலுவலகம்
OFFICE OF THE CABINET OF MINISTERS

ජනරජ චතුරශ්‍රය, ශ්‍රීමත් බාරොන් ජයතිලක මාවත, කොළඹ 01.
குடியரசுச் சதுக்கம், சேர் பாரோன் ஜயதிலக்க மாவத்தை, கொழும்பு 01. இலங்கை.
Republic Square, Sir Baron Jayathilaka, Mawatha, Colombo 01. Sri Lanka.

මගේ අංකය
எனது இல.
My No.
11/1288/558/031

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date

மாண்புமிகு பிரதம அமைச்சருக்கும்,
மாண்புமிகு சிரேட்ட அமைச்சர்களுக்கும்,
மாண்புமிகு அமைச்சர்களுக்கும்.

## அமைச்சரவை விஞ்ஞாபனங்களை அமைச்சரவைக்கு சமர்ப்பித்தல் தொடர்பிலான வழிகாட்டல்கள்

அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படும் விஞ்ஞாபனங்கள் இன்னும் கூடுதலான அளவில் தகுந்த முறையில் தயாரிக்கப்படுவதை உறுதி செய்யும் பொருட்டு, மேற்போந்த விடயம் சம்பந்தமாக 2010 மே மாதம் 05 ஆம் திகதியிடப்பட்டு என்னால் வெளியிடப்பட்ட வழிகாட்டல்களுடன் சில திருத்தங்களையும் சேர்த்து இந்த வழிகாட்டல்களை மீள வெளியிடுவதற்கு நான் விரும்புகின்றேன்.

**01. அமைச்சரவையின் அங்கீகாரம் நாடப்பட வேண்டிய விடயங்கள்:**

**அரசியலமைப்பின் கீழ் அல்லது பிற எந்த எழுத்திலான சட்டத்தின் கீழ் அல்லது நிருவாக ஒழுங்கு விதிகளின் கீழ் பிற அதிகாரபீடங்களுக்கு / நிறுவனங்களுக்குக் கையளிக்கப்பட்டுள்ள விடயங்கள் நீங்கலாக அரசாங்கத்தின் சார்பில் எடுக்கப்படவுள்ள முக்கியமான தீர்மானங்களுக்கு மாத்திரமே அமைச்சரவையின் அங்கீகாரம் நாடப்படல் வேண்டும்.** இதற்கமைவாக அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பிரதானமாக வேண்டுகின்ற விடயங்கள் பின்வருமாறு:

(I) வரவு செலவுத்திட்ட உரையில் சேர்த்துக் கொள்ளப்பட்டதன் பயனாக அல்லது ஏற்கனவே அமைச்சரவை விஞ்ஞாபனமொன்றில் சேர்த்துக் கொள்ளப்பட்டதன் பயனாக அமைச்சரவையின் அங்கீகாரம் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள விடயங்கள் தவிர்ந்த பிற முக்கியமான கொள்கை விடயங்கள்.

(II) மேற்போந்த (I) இல் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் கொள்கையொன்றாக அங்கீகரிக்கப்பட்டுள்ள பிரேரிப்புகளை நடைமுறைப்படுத்துவதற்காக இயைபுள்ள அமைச்சுக்களினால் தயாரிக்கப்படும் நிகழ்ச்சித் திட்டங்களும் கருத்திட்டங்களும்.

(III) முதற்கட்டமாக புதிய சட்டங்களை தயாரிக்குமாறு அல்லது ஏற்கனவேயுள்ள சட்டமொன்றிற்கான திருத்த சட்டத்தைத் தயாரிக்குமாறு சட்டவரைநருக்கு அறிவுறுத்துவதற்கான அங்கீகாரத்தைப் பெற்று அதன் பின்னர் அவ்வண்ணம் தயாரிக்கப்பட்ட வரைவுச் சட்டத்தை வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் அவற்றைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும்.

ලේකම්
செயலாளர்
Secretary
2329620

අතිරේක ලේකම්
மேலதிகச் செயலாளர்
Additional Secretary
2325279
2329621

පරිපාලන නිලධාරී
நிருவாக உத்தியோகத்தர்
Administrative Officer
3136199

(IV) அங்கீகாரத்தைப் பெறுவதற்காக பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படவுள்ள விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் இயைபுள்ள சட்டங்களின் கீழ் அவருக்குக் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் மீது அவரினால் விடுக்கப்பட்ட கட்டளைகளும் அறிவித்தல்களும்.

(V) அரசாங்கத்தின் சார்பில் வெளிநாட்டு அரசாங்கங்களுடன் / சர்வதேச அமைப்புகளுடன் கைச்சாத்திடப்படவுள்ள சகல உடன்படிக்கைகளும் புரிந்துணர்வு உடன்படிக்கைகளும்..

(VI) அப்போதைய தேசிய கொள்வனவு முகவராண்மையினால் வெளியிடப்பட்ட கொள்வனவு வழிகாட்டல்களின் 2006.10.05 ஆம் திகதியிடப்பட்ட 6 ஆம் இலக்க குறைநிரப்பியின் 2.14.1 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள பெறுமதி எல்லைகளை விஞ்சுகின்ற கேள்விகளின் அளிப்பு.

(VII) நிதி, திட்டமிடல் அமைச்சினால் வெளியிடப்பட்ட அரசாங்க கேள்வி நடைமுறையின் II ஆம் பகுதியிலுள்ள 232 ஆம் வழிகாட்டலின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் நியமனஞ் செய்யப்படும் இணக்கப்பேச்சுக் குழுக்களின் நியமனம்.

(VIII) தேசிய நலனின் பொருட்டு விதிவிலக்கான நிலைமைகளில் நிதி ஒழுங்குவிதிகள், தாபன விதிக் கோவை, தேசிய கொள்வனவு வழிகாட்டல்கள் மற்றும் நிதி, திட்டமிடல் அமைச்சினால் வெளியிடப்பட்ட அரசாங்க கேள்விச் நடைமுறை மீதான வழிகாட்டல்களின் II ஆம் பகுதி ஆகியவற்றின் ஏற்பாடுகளிலிருந்து விலகிச் சென்று நடவடிக்கை எடுப்பதற்கு அங்கீகாரத்தை நாடுதல்.

(IX) வரவு செலவுத் திட்டத்திலிருந்து குறித்தொதுக்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகளை மாற்றுவதன் மூலம் செலவினத்தை எதிர்நோக்க முடியாத நிலையில் உள்ள அல்லது அடுத்த வரவு செலவுத் திட்டம் வரை பிற்போட முடியாத நிலையில் உள்ள அவசர விடயங்களுக்காக பாராளுமன்றத்திற்கு குறைநிரப்பு மதிப்பீடுகளை சமர்ப்பித்தல்.

(X) வருடாந்த ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முற்பணக் கணக்கு எல்லைகளைத் திருத்துதல்.

(XI) அரசியலமைப்பின் (பதினெட்டாம் திருத்தத்தினால் திருத்தப்பட்டவாறானது) 55(1) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு உட்பட்டு அரசாங்க உத்தியோகத்தர்கள் தொடர்பிலான சகல கொள்கை விடயங்களையும் வகுத்தமைப்பதற்கும் தீர்மானிப்பதற்கும் அங்கீகாரம் பெற்றுக் கொடுத்தல்.

(XII) அரசியலமைப்பின் (பதினெட்டாம் திருத்தத்தினால் திருத்தப்பட்டவாறானது) 55(2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவைக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் மாவட்ட செயலாளர்களையும் உள்ளடக்கி சகல திணைக்களத் தலைவர்களினதும் நியமனங்கள், பதவியுயர்வுகள், இடமாற்றங்கள், ஒழுக்காற்று கட்டுப்பாடுகள் மற்றும் பதவி நீக்கம் தொடர்பிலான விடயங்கள்.

(XIII) அரசாங்கக் கூட்டுத்தாபனங்களினதும் நியதிச் சட்டசபைகளினதும் ஆண்டறிக்கைகளையும் கணக்குகளின் கூற்றுக்களையும் / வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகளையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு அங்கீகாரம் வழங்குதல். (இந்த விடயம் தொடர்பில் 2010 யூலை மாதம் 28 ஆம் திகதியன்று எடுக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைவாக சமர்ப்பிக்கப்படவுள்ள அறிக்கைகளையும் உள்ளடக்கி).

## 02. அங்கீகாரம் பெறுவதற்கு அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட தேவையற்ற விடயங்கள்:

(I) **அரசியலமைப்பின் அல்லது பிற எந்த எழுத்துமூலச் சட்டத்தின் அல்லது நிதி ஒழுங்குவிதிகள், தாபன விதிக் கோவை, அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள், கொள்வனவு வழிகாட்டல்கள் முதலியனவற்றின் ஏற்பாடுகளின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவை தவிர்ந்த பிற அதிகாரபீடங்கள் மீது (அரசியலமைப்பின் 13 ஆம் திருத்தத்தின் 9 ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள விடயங்களையும் உள்ளடக்கி) கையளிக்கப்பட்ட விடயங்கள்.**

(II) தேசிய நலனின் பொருட்டு அத்தியாவசியமானவைகளாகவிருந்தாலொழிய, அரசாங்க தொழில் முயற்சிகள், அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்டசபைகள் ஆகியவற்றின் பணிப்பாளர்கள் சபையினால் இயைபுள்ள நிறுவனங்களின் வர்த்தக ரீதியான ஒப்பேறு வாய்ப்பு நிலையின் அடிப்படையில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு இசைவற்ற தீரமானங்களை எடுப்பதற்கு அங்கீகாரம் கோருவது.

(III) நீதிமன்றமொன்றின் முன் முடிவுறாமல் எதிர்பார்த்த நிலையில் உள்ள விடயங்கள் (எனினும், சட்ட விடயமொன்றின் தொடர்பில் தீர்த்துக் கொள்வதற்கு இயைபுள்ள தரப்புகளுடன் உடன்பாட்டுக்கு வருவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் தேவையானது).

(IV) நீதிமன்றக் கட்டளையொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு (மேன்முறையீடொன்றைச் சமர்ப்பிப்பதற்கு ஏற்பாடு உள்ளபோதிலும் அவ்வாறு செய்வதற்கு எதிர்பார்க்கப்படாத விடயமொன்றில் மட்டும்).

(V) விசேட தொழில்சார் / தொழில்நுட்பத் துறைகளுக்கும் /தேர்ச்சித் தொழில்களுக்கும்கூட அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்குப் புறம்பாக, பொதுத் திறைசேரியின் முன் அங்கீகாரமின்றி ஆலோசகர்களை / உசாத்துணைவர்களை நியமித்தல்.

(VI) அமைச்சரவையினால் எடுக்கப்பட்ட தீர்மானமொன்றின் நியதிகளின் பிரகாரம் பிற அதிகாரபீடங்களிடம் கையளிக்கப்பட்ட விடயங்கள்.

## 03. அமைச்சரவை விஞ்ஞாபனங்களைத் தயாரித்தல்:

(I) மேற்போந்த 01 ஆம் 02 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களைக் கவனத்திற்கு எடுத்துக் கொண்டு அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் சம்பந்தமாக மாத்திரம் மாண்புமிகு அமைச்சர்களின் ஆலோசனைக்கமைய அமைச்சரவை விஞ்ஞாபனங்களைத் தயாரித்தலானது, அமைச்சின் செயலாளரினால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(அ) **அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் உள்ள பிரேரிப்புகள் தொடர்பிலான பொறுப்பானது மாண்புமிகு அமைச்சருக்கு உரியதாகவிருந்தபோதிலும், அதிலுள்ள விடயங்களின் செம்மை தொடர்பில் அமைச்சின் செயலாளர் பொறுப்புடையவராதல் வேண்டும்**. ஆதலால், அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் அமைச்சரவை அலுவலகத்திற்கு அனுப்பப்படும் போது உள்ளடக்க விளக்கக் கடிதம் அமைச்சின் செயலாளரினால் ஒப்பமிடப்படாத சந்தர்ப்பங்களில், இந்தக் கடிதம் சிரேட்ட உத்தியோகத்தர் ஒருவரினால் மேலொப்பமிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) **சமர்ப்பிக்கப்படும் பிரேரிப்புகள் "மஹிந்த சிந்தனை - எதிர்கால தொலைநோக்கு" என்பதன் பரந்த கட்டுக்கோப்பிற்கு அமைவாகவிருக்கின்றமை மற்றும் அதற்கமைவாக அந்த நோக்கத்தின் பிரகாரம் துறை ஒவ்வொன்றுக்கும் தயாரிக்கப்பட்டுள்ள விரிவான**

**திட்டங்களுக்கு அமைவானதாகவும் சமர்ப்பிக்கப்படும் பிரேரிப்புகள் இயைபுள்ள விடயங்கள் சம்பந்தமான சகல தகவல்களும் சரியாக ஆராய்ந்ததன் பின்னர் எனவும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.**

(இ) விஞ்ஞாபனத்தில் உள்ள பிரேரிப்பானது பிற அமைச்சுகளுக்குத் தொடர்புடையதாயின் அல்லது அவற்றிற்கு பாதிப்பினை ஏற்படுத்துமாயின் அந்த அமைச்சுடன் கலந்துரையாடி உடன்பாடொன்றிற்கு வந்திருத்தல் வேண்டும். அத்தகைய விடயங்களில் இயைபுள்ள அமைச்சர்கள் இணைந்து கூட்டு விஞ்ஞாபனமொன்றைச் சமர்ப்பிப்பது கூடுதலான அளவில் பொருத்தமானதாகும்.

(ஈ) பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்ற சட்டமூலங்களுக்கு அங்கீகாரத்தினை நாடி சமர்ப்பிக்கப்படுகின்ற விஞ்ஞாபனமொன்றுக்கு சட்டமூலமானது மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்டு இணைக்கப்பட வேண்டுமென்பதுடன் இதனுடன் இந்த சட்டமூலத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு முரணற்றவையெனவும் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் மூலம் விதிக்கப்பட்ட மட்டுப்பாட்டிற்கும் உட்படாததெனவும் இது பாராளுமன்றத்தில் சட்ட ரீதியாக இயற்றப்படலாமெனவும் குறிப்பிட்டு கௌரவ சட்டமா அதிபரினால் வழங்கப்படும் சான்றிதழானது இணைக்கப்பட்டுமிருத்தல் வேண்டும்.

(உ) பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு முன்னர் அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெறுவதன் பொருட்டு அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்படவுள்ள வெவ்வேறு சட்டங்களின் கீழ் ஆக்கப்படவுள்ள ஒழுங்குவிதிகளும், அரசாங்கத்தினால் கையொப்பமிடப்படவுள்ள உடன்படிக்கைகள் தொடர்பிலான விஞ்ஞாபனங்களும் சட்டவரைநரின் ஒருப்பாட்டுடனும் கௌரவ சட்டமா அதிபரின் அங்கீகாரம் பெறப்பட்டதன் பின்னரும் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(ஊ) கொள்வனவு விடயங்கள் தொடர்பிலான விஞ்ஞாபனங்களைச் சமர்ப்பிப்பதில் அரசாங்க கொள்வனவு வழிகாட்டல் கோவை - 2006 இன் 8 ஆம் அத்தியாயத்தில் விதித்துரைக்கப்பட்டுள்ளவாறு, குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியில் கொள்வனவு மேன்முறையீட்டுச் சபைக்கு மேன்முறையீட்டினைச் சமர்ப்பிப்பதை இயலச் செய்வதன் பொருட்டு கொள்வனவுக் குழுவின் தீர்மானம் சகல வெற்றி பெறாத கேள்வியாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதெனவும், கொள்வனவு மேன்முறையீட்டுச் சபைக்கு மேன்முறையீடுகள் கிடைத்துள்ளதெனவும்/ கிடைக்கவில்லையெனவும் திட்டவட்டமாக குறிப்பிடப்படுதல் வேண்டும். கொள்வனவு மேன்முறையீட்டுச் சபைக்கு மேன்முறையீடுகள் சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களில் அச்சபையின் சிபாரிசு பற்றியும் அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டு அத்தகைய சிபாரிசின் பிரதியொன்று இணைக்கப்படுதல் வேண்டும்.

(எ) விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் பற்றி அமைச்சரவையினால் முன்னர் கலந்துரையாடப்பட்டிருப்பின் இயைபுள்ள அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் இலக்கமும் கூட்டம் நடாத்தப்பட்ட திகதியும் புதிய விஞ்ஞாபனத்தில் சுட்டிக்காட்டப்படல் வேண்டும்.

(ஏ) அமைச்சரவையினால் அறிக்கையொன்று கோரப்பட்டு புதிய அமைச்சரவை விஞ்ஞாபனம் என்ற வடிவத்தில் இயைபுள்ள அறிக்கை சமர்ப்பிக்கப்படும் போது மூல விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களும் புதிதாகச் சமர்ப்பிக்கப்படுகின்ற விஞ்ஞாபனத்தில் சுருக்கமாக சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

(II) நிதி, திட்டமிடல் அமைச்சரினதும் இயைபுள்ள ஏனைய அமைச்சர்களினதும் அவதானிப்புரைகளின்றி கிடைக்கப்பெறுகின்ற ஏதேனும் விஞ்ஞாபனமொன்று சம்பந்தமாக தீர்மானம் எடுப்பது சாத்தியமற்றதாகையினால், விஞ்ஞாபனத்தைச் சமர்ப்பிக்கும் அமைச்சானது இயைபுள்ள விஞ்ஞாபனத்தை கவனமாக ஆய்வு செய்து அமைச்சுக்கள் அவதானிப்புரைகளை சமர்ப்பிப்பதை இயலச் செய்வதன் பொருட்டு மிகவும் முன்கூட்டியே அமைச்சரவை விஞ்ஞாபனங்களை நிதி, திட்டமிடல் அமைச்சுக்குப் பிரதியுடன் அமைச்சரவை அலுவலகத்துக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

(III) அமைச்சரவை அலுவலகத்திற்குக் கிடைக்கப்பெறுகின்ற அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் முதலில் குறித்த விடயத்தைக் கையாளுகின்ற அமைச்சரவை உபகுழுவிற்குத் தொடர்புபடுத்தப்படும். அத்தகை விஞ்ஞாபனங்கள் இயைபுள்ள உபகுழுவின் சிபாரிசுகளுடன் மாத்திரமே அமைச்சரவையினால் கலந்துரையாடப்படுவதற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

(IV) **சகல அமைச்சரவை விஞ்ஞாபனங்களும் மும்மொழிகளில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.** எனினும் மொழியொன்றில் தயாரிக்கப்பட்ட நீண்ட இணைப்புகளை மும்மொழிகளிலும் தயாரித்து தாமதமின்றி சமர்ப்பிக்கும் கஷ்டத்தினைக் கவனத்திற்கு எடுத்துக் கொண்டு, இது தொடர்பில் பின்வருமாறு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

(அ) விஞ்ஞாபனங்களுடன் இயைபுள்ள இணைப்புகள் பின்வரும் வகுதிகளைச் சேர்ந்தவையாயின் அவை மும்மொழிகளிலும் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

* பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்காக சட்டவரைநரினால் தயாரிக்கப்பட்ட சட்டமூலங்கள் அல்லது குறித்த சட்டமொன்றின் துணைச் சட்டமாக பாராளுமன்ற அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப்படும் கட்டளையொன்று (இயைபுள்ள அமைச்சினால் சட்டவரைநருக்கு வழிகாட்டலாகத் தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் தவிர்ந்தவை).

* அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் பொது மக்களின் தகவலுக்காக வெளியிடப்படவுள்ள ஆவணமொன்று.

* வெளியிடப்படாவிட்டாலும் ஆனால் குறிப்பிட்ட துறையொன்றுக்காகத் தயாரிக்கப்பட்ட கொள்கைக் கூற்றுகள் போன்ற பல்வேறு மட்டங்களிலும் உத்தியோகத்தர்களினால் பயன்படுத்தப்படுவதற்கு கருதப்பட்டுள்ள வைகளுமான ஆவணங்கள்.

* அமைச்சரவையின் அங்கீகாரத்தை நாடி சமர்ப்பிக்கப்படும் வரைவுச் சுற்றறிக்கைகள்.

* அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றதன் பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப்படவுள்ள உடன்படிக்கைகள்.

(ஆ) ஒருசிலரின் உபயோகத்திற்காக பெரும் முயற்சியெடுத்து மும்மொழிகளிலும் சில ஆவணங்கள் தயாரிக்கப்பட வேண்டியதாகவிருப்பின் அத்தகைய முயற்சிகளின் நலன்கள் ஆகக் குறைவானதகாவிருக்கும். அத்தகைய ஆவணங்களைத் தயாரிப்பதற்கு பெருளவு காலப்பகுதியை செலவழிக்க வேண்டியிருக்குமென்பதன் காரணமாக அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பிப்பதில் தாமதம் ஏற்படலாம். நீதிமன்றத்தில் ஆட்சேபிக்கப்படுவதற்கு உட்படத்தக்க கொள்வனவுக் குழுக்களின் அறிக்கைகள் தொடர்பில் மும்மொழிகளிலும் தயாரிக்கப்படும் வாசகங்களுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படுமிடத்து அது குழப்பநிலையை உருவாக்கலாம். இந்த விடயங்களைக் கவனத்திற்கு எடுத்து கொண்டு கொள்வனவுக் குழுக்களின் அறிக்கைகளையும் தொழினுட்ப மதிப்பீட்டுக்குழுக்களின் அறிக்கைகளையும் மொழியொன்றில் (உத்தியோகத்தர்கள் குழுவினால் ஆரம்பத்தில் தயாரிக்கப்படும் மொழியில்) மாத்திரம் சமர்ப்பித்தல் போதுமானதாகும். எனினும், அத்தகைய விடயங்களில் பின்வருமாறு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

(I) கொள்வனவுக் குழுக்களின் அறிக்கைகளிலும் தொழினுட்ப மதிப்பீட்டுக்குழுக்களின் அறிக்கைகளிலும் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய விடயங்களுன் பொழிப்பொன்று அமைச்சரவை விஞ்ஞாபனத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

(II) மேற்போந்த தொடக்க விடயங்களை அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் உள்ளடக்குவதன் நிமித்தம் அமைச்சரவை விஞ்ஞாபனம் நீள்வதாகக் காணப்படின் சுருக்கக் குறிப்பொன்று மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்டு அமைச்சரவை விஞ்ஞாபனத்துடன் இணைத்துச் சமர்ப்பிக்கப்படலாம்.

(மேற்போந்த (I), (II) ஆகியவற்றின் கீழுள்ள விடயங்களிலும்கூட உத்தியோகத்தர்களினால் ஒப்பமிடப்பட்ட கொள்வனவுக் குழுக்களின் அறிக்கைகளும் தொழினுட்ப மதிப்பீட்டுக்குழுக்களின் அறிக்கைகளும் எந்த மொழியிலும் இணைக்கப்பட்டுச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்).

(இ) இயைபுள்ள அமைச்சினால் சட்டவரைநருக்கு வழிகாட்டலாகத் தயாரித்து அனுப்பப்படும் ஆவணங்களும் வரைவு வடிவத்திலுள்ள கொள்கைக் கூற்றுகளும் அவற்றின் உள்ளடக்கத்தில் உள்ள முக்கிய விடயங்களைக் குறிப்பிடும் பொழிப்பொன்றுடன் மும்மொழிகளிலும் சமர்ப்பிக்கப்படலாம்.

(V) அமைச்சரவையின் அங்கீகாரம் நாடப்படும் விடயங்கள் பற்றி விஞ்ஞாபனத்தின் இறுதிப் பந்தியில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(VI) அமைச்சரவை விஞ்ஞாபனங்களைத் தயாரிப்பதிலும் சமர்ப்பிப்பதிலும் இந்த வழிகாட்டல்களையும் அமைச்சரவைச் செயலாளரினால் காலத்திற்குக் காலம் வெளியிடப்படும் அறிவுறுத்துரைகளையும் பின்பற்றுமாறு தங்கள் அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தவும்.

**ஒப்பம் : மஹிந்த ராஜபக்ஷ,**
**சனாதிபதி.**

2011 யூன் மாதம் 10 ஆம் திகதி.

**இணைப்பு 3**

**அமைச்சரவை அலுவலகத்தின் பதவியினர்கள் 2011-12-31 ஆம் திகதியன்றுக்கான பதவியணி பற்றிய விபரங்கள்**

| பதவியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடமாகவுள்ள பதவியணி | மேலதிகப் பதவியணி |
|---|---|---|---|---|
| சிரேட்ட மட்டம் | 11 | 08 | 03 | - |
| முதலாம் மட்டம் | 08 | 08 | - | - |
| இரண்டாம் மட்டம் | 28 | 24 | 04 | - |
| ஆரம்ப மட்டம் | 26 | 25 | 01 | |
| பிறஅமய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படையின் | - | 02 | - | - |
| | **73** | **67** | **8** | |

**2011-12-31 திகதியில் இருந்தவாறான பதவியினர்கள்**

| | பதவி | அங்கீகரிக்கப்பட் எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிககை | வெற்றிடம் |
|---|---|---|---|---|
| 1 | செயலாளர் | 01 | 01 | - |
| 2 | மேலதிகச் செயலாளர் | 03 | 02 | 01 |
| 3 | சிரேட்ட உதவிச் செயலாளர் | 02 | 01 | 01 |
| 4 | கணக்காளர் | 01 | 01 | - |
| 5 | உதவிச் செயலாளர் (இ.நி.சே) | 02 | 01 | 01 |
| 6 | உதவிச் செயலாளர் (இ.நி.சே சாராத) | 01 | 01 | - |
| 7 | உதவிப்பணிப்பாளர் ॥ (முன்னாள் நிகழ்ச்சித்திட்ட வரைபாளர்) | 01 | 01 | - |
| 8 | நிருவாக உத்தியோகத்தர் | 01 | 01 | - |
| 9 | கூட்டிணைப்புச் செயலாளர் | 01 | 01 | - |
| 10 | மொழி கூட்டிணைப்பாளர் (ஒப்பந்தம்) | 02 | -2 | - |
| 11 | மொழி பெயர்ப்பாளர் | 05 | 05 | - |
| 12 | முன்னேற்ற உதவியாளர் | 01 | 01 (பதில்) | - |
| 13 | ஆவணமிடல் உதவியாளர் | 02 | - | 02 |
| 14 | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் | | | |
| | முன்னாள் எழுதுநர் | 12 | 12 | - |
| | ஆங்கிலச் சுருக்கெழுத்தாளர் | 02 | 02 | - |
| | சிங்களச் சுருக்கெழுத்தாளர் | 02 | 02 | - |
| | ஆங்கிலச் தட்டெழுத்தாளர் | 03 | 03 | - |
| | சிங்களச் தட்டெழுத்தாளர் | 02 | 02 | - |
| | தமிழ் தட்டெழுத்தாளர் | 02 | 02 | - |
| | | **23** | **23** | |
| 15 | உதவி நிகழ்ச்சித்திட்ட வரைவாளர் | 01 | - | 01 |
| 16 | நூலகர் | 01 | - | 01 |
| 17 | தரவு உள்ளீட்டாளர் | 01 | 01 | - |
| 18 | வரவேற்பாளர் | 01 | | 01 |
| 19 | சாரதி | 12 | 12 | - |
| 20 | ஏவலாளர் | 01 | 01 | - |
| 21 | புத்தகம் கட்டுநர் | 01 | 01 | - |
| 22 | அலுவலக உதவியாளர் | 11 | 11 | - |

இணைப்பு 4



# ஒதுக்கீட்டுக் கணக்கு - 2011

அமைச்சின் பெயர் : அமைச்சரவை அலுவலகம்

செலவினத் தலைப்பு இல.: 5

| வருடாந்த மதிப்பீட்டில் கொடுக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்ட இல: | வரவு செலவு மதிப்பீட்டில் கொடுக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டத் தலைப்பு | (1) வரவு செலவு மதிப்பீட்டில் உள்ள ஒதுக்கீடு | (2) குறை நிரப்பு ஏற்பாடும் குறை நிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கமும் | (3) நி.பி.66 மற்றும் நி.பி.69 க்கு ஏற்ப மாற்றங்கள் | (4) மொத்த தேறிய ஏற்பாடு (1+2+3) | (5) மொத்தச் செலவினம் | (6) நிறுத்தி வைக்கப்பட்ட நிதியேற்பாடு உட்பட சேமிப்பு(மிகை) (1+3±4)-6 | பக்க இல.(டிஜிஎஸ்ஏ 2 படிவத்திற்கு தொடர்புடைய குறிப்பு) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | |
| | மீண்டுவரும் | 46,970,000 | 2,350,000 | (285,000) | 49,035,000 | 46,116,994 | 2,918,006 | 02 |
| | உபமொத்தம் (மீண்டுவரும்) | 46,970,000 | 2,350,000 | (285,000) | 49,035,000 | 46,116,994 | 2,918,006 | |
| | மூலதனம் | 3,350,000 | 12,650,000 | 285,000 | 16,285,000 | 12,739,806 | 3,545,194 | 02 |
| | உபமொத்தம் (மூலதனம்) | 3,350,000 | 12,650,000 | 285,000 | 16,285,000 | 12,739,806 | 3,545,194 | |
| | மொத்தக் கூட்டுத்தொகை | 50,320,000 | 15,000,000 | | 65,320,000 | 58,856,800 | 6,463,200 | |

EXAMINED
AUDIT OBSERVATIONS ARE ANNEXED
2012.5.16
Deputy Auditor General
Date

இந்த ஒதுக்கீட்டுக் கணக்கின் இணைந்த பகுதியாக விபரமான நிகழ்ச்சித் திட்ட ஒதுக்கீட்டுக் கணக்குகளும் ஏனைய விபரமான கணக்கீட்டுக் கூற்றுக்களும் டிஜிஎஸ்ஏ 02 முதல் 11 வரையிலான படிவத்தில் பக்கம் ...... முதல் ......வரையிலும் ஏனைய குறிப்புக்கள் பக்கம் .... முதல் ...வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கணக்கிலுள்ள இலக்கத் தொகைகள், ஏனைய விபரமான கூற்றுக்கள் மற்றும் குறிப்புக்கள் யாவும் சரியானவை என்றும், தொடர்புடைய கணக்குகள் திறைசேரி கணக்குப் புத்தகங்களுடன் கணக்கிணக்கம் செய்யப்பட்டுள்ளதுடன் சரியாகவும் காணப்படுகிறது என இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

| | | |
|---|---|---|
| பிரதானகணக்காளர்/பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி) | கணக்கீட்டு உத்தியோகத்தர் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் |
| பெயர்: | பெயர்: | பெயர்: |
| திகதி : 2012. 03. 29 | பதவி: | பதவி: |
| | திகதி: | திகதி : 2012 . 03 . 29 |

**இணைப்பு 5**

**அமைச்சரவை அலுவலகம்**
**அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான B முற்பணக் கணக்கின்**
**ஒப்பீட்டுக் கூற்று 2011 ஆம் ஆண்டு**

**விடய இலக்கம் 05011**

| | செலவினத்தின் உச்ச எல்லை | பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை | பற்று மீதியின் உச்ச எல்லை |
|---|---|---|---|
| | ரூபா ச | ரூபா ச | ரூபா ச |
| ஒதுக்கீட்டு சட்டத்தினால் வழங்கப்பட்ட எல்லைகள் | 1,256,000.00 | 1,500,000.00 | 15,000,000.00 |
| திருத்தியமைக்கப்பட்ட எல்லைகள் கட்டண இலக்கம் | 1,800,00.00 | 1,500,00.00 | 15,000,000.00 |
| வருட இறுதியில் உள்ளபடியான பெறுமதிகள் | 1,736,101.00 | 2,497,862.38 | 144,422,981.19 |
| (நி.ஒ. 503 (1) பிரகாரம் ஒப்பிடப்பட்டதன் பின்னர்) | - | - | - |

**02 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு கடன் மற்றும் முற்பணக் கட்டுப்பாட்டுக் கணக்கு**

| | திணைக்கள ஏடுகளின் படி | திறைசேரி கணனி அறிக்கையின் படி |
|---|---|---|
| | ரூபா ச | ரூபா ச |
| 2011-01-01 ஆம் வருட ஆரம்பத்தில் முன் கொணரப்பட்ட நிலுவை | 10,725,100.68 | 145,184,742.52 |
| கூட்டு வருடத்தினுள் மொத்த பற்று | 3,234,358... | 13,970,752.68 |
| இணைப்பு இலக்கம் 01 | | |
| கழிக்குக : வருடத்தினுள் மொத்த வரவு | 2,888,190.38 | 148,084,226.95 |
| இணைப்பு இலக்கம் 01 | | |
| வருட இறுதியில் மீதி | 11,071,268.30 | 11,071,268.30 |